1449

No. M:.2210 வருஷ சந்தா ரூ. 1 8 0

ஆசிரியர்:—வை. மு. கோதை நாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

17 JUN 192

மலர் IV May 1927 இதழ் 6



தனிப்பிரதி அணா 3:

ஜகன்மோகினி ஆபீஸ்,
26 தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

M211, N22JM
N27.4.5
182835

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

# "இந்து நேசன்"

(21-5-1927.)

"ஜகன்மோகினி"

திருவல்லிக்கேணியில் பிரசுரமாகும் இவ்வரிய பத்திரிகையின் 5-வது இதழ் சமீபத்தில் வரப்பெற்றோம். இப்பத்திரிகையின் ஆசிரியை ஸ்ரீமதி வை. மு கோதைநாயகியம்மாள் விடா முயற்சியோடு எழுதிவரும் 'பத்மசுந்தரன்' என்னும் நாவலின் ஏழாம் அதிகாரம் இதனில் சம்பூர்ணமாக வெளிவந்திருக்கின்றது. அன்றியும் 'கரும்பு ரஸத்தில் கனிரசம் கலந்த' பான்மைபோல் நாவலைப் படிப்போர்க்கு நன்னயம் பெருகுமாறு உருவாகாரத்தையூட்டி மகிழ்விக்கக் கருதி 180-ம் பக்கத்திற்கும் 181-ம் பக்கத்திற்கு மிடையில் மழமழப்பான காகிதத்தில் பத்மவல்லியின் இருவாக்கியங்களைக் குறிக்கும் படமொன்றை அச்சிட்டுச் சேர்த்திருப்பது எவ்வெவர்க்கும் இனிமை பயப்பது திண்ணம். சந்தா நேயர்கள் இச்சஞ்சிகைகளை ஒன்று சேர்த்து வைத்து இறுதியில் ஒரே புத்தகமாகப் பைண்டு செய்யும்படி பக்கங்கள் தொடர்ச்சேர்த்தியாகப் போட்டு வருகிறார்கள். கற்பனைக் கதைகளில் கருத்து வைப்பார்க்கு உரியவாறு கனமிகுந்த கருத்துகள் அமைந்த இந்த 'ஜகன் மோஹினி' தமிழரின் மனத்தை ஆகர்ஷிப்பதில் சிறிதும் பின்னடைந்ததல்ல.

---

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமக்கு எழுதும் கடிதங்களில் சந்தா நம்பரை மறக்காமல் தெரிவிக்கவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் நமக்கு புது விலாசத்தை 25 தேதிக்குள் தெரிவிக்காவிடில் அவர்களது பழைய விலாசத்திற்கே சஞ்சிகை அனுப்பப்படும். இதனால் ஏற்படும் தவறுதலுக்கு நாம் பொறுப்பாளியல்ல.

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

வாத்தியார்:—ஏனடா இத்தனை நேரம்?

பையன்:—சார்! எனக்குப் பரிக்ஷை நன்றாக பாஸாக வேண்டுமென்று பிள்ளையாரை வேண்டிக்கொண்டு வந்தேன்; அதனால் நேரமாய்விட்டது.

வாத்தியார்:—தடிப்பயலே! ஊரைச்சுற்றி விட்டு வந்தாயோ?

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JUN 1927
MADRAS

## 8 வது அதிகாரம்

### ஈன்றோரை இகழ்தல் இடர்க்கடல் மூழ்குதல்.

சிறையிலிருக்கும் செல்லப்பா காந்தாமணியின் கடிதத்தைக் கண்டு மனம் கலங்கிச் சோர்ந்து விழுந்துவிட்டானென்றும் அவனை அவன் தந்தை தம்மனிதரை அனுப்பி அழைத்தபோது அவன் வராமல் போய்விட்டானென்றும் முன்னதிகாரத்தில் கூறினோமல்லவா? பிறகு அவன் எங்கு சென்றான் என்பதைக் கவனிப்போம்:—

செல்லப்பா தனக்குக் காந்தாமணி அனுப்பிய கடிதத்தை கண்ணுற்றதும் பெருந் துயரத்திலாழ்ந்தான்; தான் சற்றும் நினையாததும் எதிர்பாராததும் தான் எண்ணியதற்கு நேர் விரோதமாகவும் தனக்கு வந்த கடிதத்தைப்பார்த்து அவன் இன்னதென்று சொல்ல சாத்தியமில்லாதவிதமாய்த் தவித்தான். அவன் எண்ணாதும் எண்ணித் துடித்தான். போலீஸார் அவனை அவனுடைய பெற்றோர்களை இன்னாரென்றுதெரிவிக்கும்படி பலதரம் கேட்டும் அவன் சரியான மறுமொழி கொடுக்கவில்லை; அதன்பின் பிற்பகல் போலீஸார் பத்திரிகை மூலமாக அவனை இன்னானென்று தெரிந்துகொண்டதும் அவர்கள் அவன்பொய்சொல்லியதற்காக அவன்மீது கோபங்கொண்டு அதைஒருகுற்றமாக எடுத்துக்கொண்டார்கள். இதற்குள் செல்லப்பாவின் தந்தையாலனுப்பப்பட்ட நடராஜன், குமாஸ்தா ஆகிய இருவரும் அவ்விடம்வந்து வந்தவேலையை முடித்துக்கொண்டு செல்லப்பாவை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் வீதியில் நின்று பேசிக்கொண்டிருக்கையில்தான் செல்லப்பா திடீரென்று அங்கு சென்று கொண்டிருந்த மோட்டார் காரில் ஏறிச்சென்றான்.

அந்த வண்டியில் உட்கார்ந்திருந்த மனிதன் செல்லப்பாவின் உயிர்த்தோழனாகிய ரத்தினசாமி என்பவன். அவன் தான் பத்மவல்லியின் மீது கடுமையல் கொண்டிருப்பவன். செல்லப்பா அவனை மணந்து கொள்ளும் படிதான் அன்று பத்மவல்லியைக் கடிந்து கொண்டான்; அவனுக்குப் பத்மவல்லியை எவ்வாறேனும் மணம் செய்து வைப்பதாக செல்லப்பா வாக்குக்கொடுத்திருந்தான். மோட்டாரில் உட்கார்ந்திருந்த ரத்னசாமி செல்லப்பாவைப் பார்த்ததும் அன்போடு தழுவிக்கொண்டு

"ஆ! என்னருமை செல்லப்பா! நீ ஏன் இங்கு ரோட்டில் நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தாய்? உடம்பு மிகவும் மெலிந்திருக்கின்றதே ஏன்? நான் நான்கு நாளாய் ஊரிலில்லை. இப்போதுதான் வருகிறேன். ஏன் உன் முகம் வாட்டமடைந்திருக்கின்றது?" என்று கேட்டான். செல்லப்பாவும் அன்போடு பேசத்தொடங்கி, நடந்த வரலாற்றையெல்லாம் ஒன்றுவிடாமற் கூறினான். இதைக்கேட்ட ரத்னசாமி அப்படியே அசைவற்று வியப்புற்று "ஆ இப்படியும் நடக்குமோ? இந்த அநியாயத்தை உன்பெற்றோர்கள் தான் செய்திருப்பார்கள் என்று எனக்கும் திட்டமாகத்தோன்றுகிறது. ஐயோ! நீ பட்டினியோடிருப்பதாக உன் முகம் கூறுகின்றது. நீ முன்னால் வயிற்றிற்கு ஆகாரத்தைப்பார்த்துக்கொள்; பிறகு பேசலாம். வண்டியை நேரே ஆநந்த பவனுக்கு ஓட்டச்சொல்கிறேன்" என்று கூறி ஆநந்தபவனுக்கு வண்டியைவிடும்படி வண்டியோட்டிக்குச் சொன்னான்.

வண்டியும் ஆநந்தபவனையடைந்தது. இருவரும் இறங்கி வண்டியோட்டிக்குச் சத்தத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றார்கள். தனியான அறையொன்றில் இவ்விருவரும் அமர்ந்து பலகாரம், காப்பீ முதலியவைகளை யுண்டார்கள். அப்போது அவர்கள் எதுவும் பேசாமல் தின்றுவிட்டு அவ்விடத்தைவிட்டு வெளியே சென்று தங்கசாலை வீதியோடு சிறிதுதூரம் நடந்து சென்று அங்கு குறுக்கே செல்லும் வீதியில் நுழைந்து, ஒரு மாடி வீட்டை யடைந்து நேரே மெத்தைக்குச்சென்று அங்கு வெகு அழகாயிருந்த அறையொன்றில் இருவரும் அமர்ந்தார்கள்; அப்பால் பின்வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

ரத்தினசாமி:—செல்லப்பா! இதென்ன அநியாயமாக விருக்கின்றதே! உனது தந்தைக்கு இத்தகைய துர்புத்தி ஏன் தோன்றவேண்டும்? கிழட்டுப்பிணம் கர்னடக நாகரிகத்தில் உழல்வது போதாதென்று உன்னை இவ்வித அவமானமும் செய்யவேண்டுமா? உனக்கு இவ்வித அவமானத்தையும் ஆபத்தையும் விளைவித்த மனிதர்கள் யாராயிருந்தாலும் நீ அவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதுதான் வீரத்தனம். உனக்கென்ன தோன்றுகின்றது? என்ன செய்வதாக உத்தேசம்?

செல்லப்பா:—(வெகு ஆத்திரத்தோடு பேசத் தொடங்கி) ஆ! ரத்தினசாமி! என்னையா நீ யோசனை கேட்கவேண்டும்? உன்

182835

னுடைய இஷ்டம்போல் நீ செய்; அதில் எனக்கும் சம்மதமே. ரத்தினம்! என்னை இவ்விதம் அவமானம் செய்த மனிதர்கள் யாராயிருந்தாலும் அநுதாபமில்லாமல் அவர்களுக்கு இதைவிட இரட்டிப்பு அவமானத்தையும் தீராத துயரத்தையும் நான் செய்து வைக்காவிட்டால் என்னுடைய மனம் நிம்மதியடையாது. ஆனால் முதலில் டீ பார்டி என்ற முகாந்திரத்தைக் காட்டி எனது நண்பன் எழுதியதாக எனக்கு வந்த கடிதத்தை அவன் அனுப்பினனு அல்லது அது நான் நினைக்கின்றபடியே மோசடிதானு என்பதை விசாரித்துச் சந்தேகமறத் தெரிந்துகொண்டால் பிறகு நாம் எந்தக் காரியத்தில் தலையிட்டுக்கொண்டாலும் பாதகமில்லை. ஆகையால் நாம் இப்போது அவன் வீட்டுக்குப் போய் வருவோம் வா—என்றான். உடனே இருவரும் எழுந்து வீதியை அடைந்து ஒரு ஜட்கா வண்டியை அமர்த்திக்கொண்டு அதில் உட்கார்ந்து தாங்கள் குறித்தவிடத்திற்கு வண்டியை விடச் செய்து அங்குப் போய்ச் சேர்ந்தார்கள். செல்லப்பா உள்ளே சென்று அங்கு உட்கார்ந்திருந்த பெரியவரைப் பார்த்து "ஐயா! சொக்கநாதன் இருக்கின்றனு? அவனை நாங்கள் பார்க்க வேண்டும்" என்று கேட்டான். இதைக் கேட்ட அந்த மனிதன் "சொக்கநாதன் ஊரிலில்லை. அவன் வெளியூர் சென்று ஒருவாரமாகிறது. திரும்பி வரும் நாள் எனக்குத் தெரியாது. தாங்கள் யார்? அவனை எதற்குத் தேடுகின்றீர்கள்?" என்று கேட்டான். இதைக் கேட்ட செல்லப்பாவுக்குத் திடீரென்று வியப்புண்டாயிற்று. சொக்கநாதன் அனுப்பியதாகத் தனக்கு வந்த அழைப்புப் பத்திரம் மோசடிதான் என்பது அப்போது அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கி விட்டது. அவன் சென்று ஒருவார காலமாய்விட்டதென்று கூறுவதால் முற்றும் அவன் நினைத்தபடியேதான் நடந்ததென்பது அவன் மனத்தில் ஊர்ஜிதமாய்விட்டது. அப்பொழுது அவன் மனத்தில் அவனுடைய பெற்றோரின் மீது உண்டாகிய சினத்திற்கு ஓரளவே இல்லை. அவன் கண்ணெதிரில் அவர்கள் தென்பட்டிருந்தால் அவர்களை ஹதம் செய்திருப்பான். அவன் கண்களில் கோபத்தீப்பொரிகள் கிளம்புகின்றன. பல்லைநாநாவென்று அவன் கடிக்கின்றான். தேகம் கட்டுக்கு மீறிப் பதைக்கின்றது. இவற்றையெல்லாம் அவன் சமாளித்து அடக்கிக்கொண்டு அந்த மனிதனைப் பார்த்து "ஐயா! நான் சொக்கநாதனுடைய நண்பன், அவனைப் பார்த்துவிட்டுப் போகலா

மென்று வந்தேன். அவன் ஊரிலில்லை என்பது எனக்குத் தெரியாது. நானும் ஊருக்குத்தான் போகிறேன்; சொல்லிவிட்டுப்போகலாம் என்று வந்தேன்.........சரி நான் போய்வருகிறேன்" என்று கூறியவண்ணம் வீதிக்கு வந்து ரத்னசாமியிடம் செய்தியைத் தெரிவித்தான். இதைக் கேட்ட ரத்தினசாமி வியப்பே உருவுற்றதுபோல் மாறுதலடைந்து "ஆ! செல்லப்பா! நான் அப்போதே உண்மையை இன்னதென்று கண்டுகொண்டேன். ஆனாலும் உன்னிஷ்டத்தைக் கெடுக்கவேண்டா மென்னும் நோக்கத்துடன் நான் இங்கு வந்தேன். இங்கு உன் சந்தேகம் நிவர்த்தியாய் விட்டது. இனிமேல் என்னசெய்யப் போகிறாய்? உன்னை இக்கதிக்கு ஆளாக்கிய அந்தப் படுபாவிகளை வதைசெய்தாலும் தீராது." என்று சொல்லப் பின் இருவரும் அதைப்பற்றிப் பேசிக் கொண்டே வீதியில் நடக்கலானார்கள். செல்லப்பா அப்போது கொண்ட ஆத்திரத்தை உணர்ந்தான் ரத்தினஸாமி. தன்னுடைய எண்ணத்தை ஏற்கெனவே பூர்த்திபண்ணுவதாக வாக்களித்திருக்கும் செல்லப்பாவின் வாக்குறுதியை நிறைவேற்ற இச்சமயந்தான் தகுதியானதென்றும் இப்போதிருக்கும் ஆத்திரத்தில் அவன் எதைவேண்டுமானாலும் செய்யத் தவறமாட்டானென்றும், அவர்களுடைய துர் எண்ணத்திற்கும் தன்னை அவமானப் படுத்தியதற்கும் அவன் அவர்களை அவமானப் படுத்தாமல் விருக்கமாட்டானென்றும், அந்த அவமானம் பத்மவல்லியை பாதித்ததாக விருந்தால் அவர்களுக்கு மிகுந்த மரியாதையாக ஆய்விடும் என்றும், இதை மெல்லச் செல்லப்பாவிடம் மீண்டும் நினைப்பூட்டவேண்டும் என்றும், எண்ணிச் செல்லப்பாவை நோக்கி, "செல்லப்பா! என்ன பேசாமல் வாளாவிருக்கின்றாய்? எந்தக் காரியமும் அந்தச் சூட்டின் பேரில் செய்வதுதான் உசிதம். ஆறிவிட்டால் பழங்கஞ்சிதான். வயிற்றில் பிறந்த புத்திரன் என்பதையும் பார்க்காமல் அவர்கள் உனக்கு இழைத்துள்ள அவமானத்திற்கு நீ அவர்களை ஆயுள் பரியந்தம் தலையெடுக்கவிடாமல் அவஸ்தைப்படும்படியான அவமானத்தையோ விசனத்தையோ உடனுக்குடன் செய்யவேண்டும். நீ என்ன யோசிக்கின்றாய்?" என்று மெல்லக் கேட்டான்.

இதைக்கேட்ட செல்லப்பா "நண்பா! எனக்கு இப்போதிருக்கும் மனக்கலக்கத்தில் அவர்களுக்கு நான் எத்தகைய தீங்கு செய்ய

வும் துணிந்தே இருக்கிறேன். அந்தச்சத்ருக்களின் வயிற்றிற் பிறந்த பத்மவல்லிக்கு ஓர் இழிவு உண்டாக்கிவிட்டால் அவர்கள் அதோடு மடிந்து விடுவார்கள். என்னருமை பத்மவல்லி நல்ல படித்த அறிவாளி; நிரம்பவும் மெச்சக்கூடிய மானவதி; கற்புக்கரசி என்று அவளையே கூறலாம். அத்தகைய உத்தமிக்குக் கெடுதல் செய்ய மனந்துணிய வில்லை. அவள் எனக்கு யாதொரு தீங்கும் செய்யவில்லை. ஆகையால் எவ்விதம் தீங்கு செய்வதென்று யோசிக்கின்றேன்'' என்று அவன் முடிப்பதற்குள் ரத்னம் பேசத்தொடங்கி, "ஏன்? அவளுக்கு நீ என்ன கெடுதல் செய்யவேண்டும்? நீ எனக்கு வாக்குறுதி செய் திருக்கின்றாயே அதை உன் பெற்றோருக்குத் தெரிவித்து நிறை வேற்றுவதென்றால், அது இனிமேல் ஒருநாளுமாகாது. அந்த வேலையை அவர்களுக்குத் தெரியாமல் மறைந்து கொண்டிருந்து நிறைவேற்றுவதுதான் நல்லது. அதனால் பத்மாவிற்கும் கெடுதி யொன்றுமில்லை. அவள் சுகமாகவும் கற்புநிலைக்கு பங்கம் வரா மலும் சாஸ்திரப்படியே மணம் செய்து கொண்டவளாவள். உன் பெற்றோருக்கும் அதனால் பெரிய அவமானமும் ஏற்படுத்திவிடலாம். அதாவது வெளிப்பார்வைக்கு பத்மா சோரநாயகனோடு எங்கேயோ ஓடிவிட்டாள் என்றவரைக்கும் காட்டிவிடலாம். உள்ளுக்குள் அவ ளுக்கு ஒரு குறைவுமின்றி நடத்தலாம். இந்த யோசனையைப்பற்றி நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான்.

இதைக்கேட்ட செல்லப்பா:—ஆமாம்; நீ சொல்வது என்னவோ சரியான யோசனைதான். ஆனால் பத்மாவிற்கு பகிரங்கத்தில் மாத்திரம் அவ்விதமான கெட்ட பெயர் ஏற்படுவது அவளுக்குத் தெரிந்து விடுமானால் அவள் உயிரையே விட்டுவிடுவாளே. கடைசியில் நமது காரியம் வீணாய்விடுமே. அதைப்பற்றி யோசிக்கவேண்டாமா? அவ ளுக்கு வெளியாரறிய கெட்ட நடவடிக்கையுள்ளவள் என்ற வசை வந்துவிட்டால் பிறகு அதுவும் நம்மைச் சேர்ந்துதானே பாதிக்கும்?

ரத்னசாமி:—நீ சொல்வதுபோல் கெட்ட நடவடிக்கையிருந்து அதனால் பெயர் வருமானால் நம்மை அது பாதிக்கும். அவள் உண்மையில் கெட்டவளன்று; வீணே வரும் பெயரால் நமக்கென்ன? அந்த விஷயம் அவள் காதில் விழாமல் நாம் ஜாக்கிரதையாகப்

பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வளவுதானே. மேலும் அவளை நான் என் உயிராக மதித்து அன்றுமுதலின்றுவரையில் அனவிடை மெழுகாக உருகி அவஸ்தைப்படுவதை நீ அறியமாட்டாயா? என்னிஷ்டத்தையும் பூர்த்தி செய்தாற்போ லிருக்கும். உன் பெற்றோரையும் அவமானப்படுத்தியதாக இருக்கும். ஒருகாரியத்தால் இருவருக்குப் பலன் கிடைப்பதைச் செய்வதுதான் நல்லது. நீ இதற்கு எவ்வித முயற்சி செய்தாலும் நானும் உனக்கு உதவி செய்கிறேன். இதற்கு நீ என்னயோசனை சொல்லுகிறாய்?'' என்றான்.

செல்லப்பா:-என்னுடைய மனம் இப்போது ஒருயோசனையிலும் செல்லவில்லை. நான் காலையில் சொல்கிறேன். என் கண்மணி காந்தாமணியின் கடிதமும் உண்மையானதா அல்லது அதையும் என் பெற்றோரே எழுதிப் போலீஸ்காரனை உள்கையாக வைத்துக்கொண்டு அனுப்பியிருப்பார்களா என்பதை முதலில் விசாரித்துக்கொள்ள வேண்டும். நான் அதற்கான முயற்சிகளைச்செய்து தெரிந்து கொண்டு உடனே இதற்கும் தகுந்த வேலைசெய்தே தீர்கிறேன். வா; நம் ஜாகைக்குப் போவோம்'' என்றான்.

இதைக்கேட்ட ரத்தினசாமி "சரி உன்னிஷ்டப்படியே செய். இன்று சால்ட்டு கொட்டகையில் சாரங்கதர நாடகம் நடக்கப் போகிறது. அதற்கு எனக்கு இரண்டு டிக்கட்டுகள் வந்திருக்கின்றன. நீயும் வா. நாம் நேரே அங்குச்சென்று நாடகத்தைப்பார்த்து விட்டு வீடு செல்லலாம்'' என்றான்.

இதைக்கேட்ட செல்லப்பா வெறுப்பாகப் பேசத்தொடங்கி, "எனக்கு இப்போது வேடிக்கை பார்ப்பதிலேயே மனம் நாடவில்லை; இந்தச் சதிக்காரர்களுக்கு முதலில் ஏதாவது செய்து தீர்த்தால் தான் என் உயிரும் உடலும் நிலைநிற்கும். ஆகையால் நீ வேண்டுமானால் சென்றுவா. நான் காந்தாமணியின் வீட்டிற்குச் சென்று உண்மையை அவளிடமிருந்தே தெரிந்துகொண்டு வருகிறேன். இதனால் எனக்கு யாதொரு அவமானமுமில்லை. நான் திரும்புகிறேன்" என்றான். இதைக்கேட்ட ரத்னம் "செல்லப்பா! நீ இந்த ஒரு டிக்கட்டைக் கையில் வைத்துக்கொள். உனக்கு அவகாசமிருந்து வந்தால், வா. இல்லா விட்டால் வேண்டாம். நான் அவசியம் சென்றுவர வேண்டும். என்னுடைய க்ளாஸ் மேட் ஒருவன்தான் இதில் சாரங்க

தானுக நடிக்கப் போகிறான். அவன் என்னை வரும்படி கட்டாயப் படுத்தி யிருக்கிறான். நான் போய்த் தீரவேண்டும். நீ இதை வாங்கிக்கொள்." என்று ஒரு டிக்கட்டை எடுத்துச் செல்லப்பாவிடம் கொடுத்து விட்டு அவன் அங்கு வந்த ட்ராமில் ஏறிக்கொண்டு சென்றான்.

டிக்கட்டை வாங்கிய செல்லப்பா நேரே சிறிது தூரம் நடந்தே வந்தான். இவர்கள் பேசிக்கொண்டே வருகையில் நடை நடப்பதே தெரியாமல் ஸென்ட்ரல் ஸ்டேஷன் வரையில் வந்து விட்டார்கள். செல்லப்பா நடந்த சிரமத்தினுல் அருகிலிருந்த மூர்மார்க்கெட்டுக்குள் நுழைந்து அதை யடுத்துள்ள பார்க்கில் சென்று ஓர் நாற்காலியில் அமர்ந்தான். அப்போது அவனுடைய மனம் பலவிதத்திலும் சிதறிக் கிடந்தமையால் அவன் சவம்போல் வெளுத்த முகத்தோடு உட்கார்ந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்த சிறிது தூரத்திற் கப்பால் வரிசையாகப் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் 5, 6 பெயர்கள் வெகு தமாஷாய்ச் சிரித்து விளையாடிக்கொண்டே சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சத்தமிட்டுப் பேசும் குரலில் ஒருகுரல் செல்லப்பாவின் காதில் பழக்கமுடையவள் குரல்போல் விழுந்தது. உடனே செல்லப்பா அந்தக் குரலைக் கவனித்து கேட்கலானுன். அந்தக் குரலொலி இவன் காதில் விழ விழ இவன் மனமும் தேகமும் ஒருவித உணர்ச்சியில் பூரித்து மகிழ்ச்சி யடைய வாரம்பித்தன. என்றாலும் மனத்தில் ஒருபுறம் ஒருவிதமான துடிப்பும் லஜ்ஜையும் உண்டாய்ப்பாதித்தன. அவன் மனத்தில் இருவகைப்பட்ட அவஸ்தையோடு அந்தக் குரலையும் அக்கூட்டத்தையும் கவனிக்கலானுன்.

அங்கு நாலைந்து பெண்பிள்ளைகள் குதூகலமாகப் பேசிக்கொண்டிருப்பதையும் சற்றுதூரத்தில் நான்கு ஆண்பிள்ளைகள் இவர்களைக் கவனித்தபடி தமாஷாகப் பேசிக் கொண்டிருப்பதையும் கவனித்த செல்லப்பா "ஆஹா! என் கண்மணி காந்தாமணியைக் காண வேண்டும் என்று நான் சற்று முன் எண்ணியதற்கு உடனே அவளுடைய சேவை இங்குக்கிடைக்கப்பெற்ற எனது பாக்யமே பாக்யம். ஐயோ! நாமும் அவளோடுகூட விருந்து அந்தச் சுக சந்தோஷத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்றெண்ணி வருந்திப்பின்பு மனத்தைத்தேற்றிக்கொண்டு அவளெதிரில் செல்லலாமென்

றால், என் மனம் சற்றுக் கூசுகின்றதே! ஒருகால் அந்தக்கடிதம் அவள் எழுதியதாக இருக்குமாயின் என்னசெய்வேன்? அவள் அந்தக் கடிதம் அநேகமாய் எழுதியிருக்கமாட்டாள். இருந்தாலும் அவள் எழுதுவதற்குச்சந்தர்ப்பம் சரியாகத்தா னிருக்கின்றது. அவள் பெரிய மனிதனின் குமாரத்தி. அதோடு பி. ஏ. படித்தவள். அவளுக்கு என்னுடைய உண்மையை எவ்வாறு அறிவிப்பது? திடீரென்று இவ்விதச் செய்தியைக் கேட்டதனுல் மனம் மாறுபாடடைந்து அவ்வாறு எழுதினுலும் எழுதியிருக்கலாம். இது சகஜம் தானே. இதற்காக நாம் அவளை வெறுப்பது அழகாகாது. நம்முடைய உண்மையை அவளே நேரில் அறிவாளாஞல் அவள் மனம் உடனே மாறிவிடுமென்றே நினைக்கின்றேன். அவள் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் நாம் எப்படி நம்முடைய வரலாற்றைக் கூறுவது? ஒருவேளை உண்மையில் அவள் மனத்தில் அவ்விதமான வெறுப்பிருக்கும் பக்ஷத்தில் அவள் திடீரென அவர்களெதிரில் நம்மை அவமதிப்பாக ஏதேனும் பேசிவிட்டால் என்ன செய்வது? ஆஹா! என் மனமோகன சிங்காரியின் குரலைக் கேட்கும்போதே அவளெதிரில் போகாமலிருக்க மனம் இடந்தரவில்லையே! என்ன செய்வேன்? ஏ காந்தாமணி! நாம் இவ்விதம் ஒருவரையொருவர் பிரிந்திருப்போமென்று நேற்று வரையில் நினைத்தவனன்றே. ஒரு விஞடிக்குள் என் தலைக்குத் தீம்பு இழைத்து அவமானத்தை உண்டாக்கி உன்னையும் பிரியும்படியாகச் செய்து என்னை இந்நிலைக்குக் கொண்டுவந்த அந்தச் சண்டாளப் பாவிகளை இப்போதே வெட்டி வீசினுலும் தீராதே. எனக்கு இத்தகைய தீங்கு நினைத்த துரோகிகளை நான் உடனே தண்டியாமல் என் தாமதிக்கவேண்டும். உடனே சென்று என் வயிற்றெரிச்சல் தீர நான் அவர்களை வதைத்தாலன்றி என்மனம் நிம்மதியடையுமா? ஹா! அந்தக் கொடுமையை நினைக்கும்போதே என்னையறியாத ஆவேசம் எனக்கு உண்டாகின்றதே! என் கண்ணுன கண்மணி காந்தாமணியைப் பிரிந்து நான் இவ்விதம் தவிக்கும்படியாகச் செய்த அந்தப் பாவிகளின் கண்ணுக விளங்கும் பத்மாவைப் பிரிந்து அவர்களை தவிக்கும்படியாக நான் உடனே செய்யாவிட்டால் என் பெயர் செல்லப்பாவன்று. என் வயிற்றெரிச்சலை வீண் போக்காமல் நான் செய்தே தீர்கிறேன். என் பத்மாவிற்குக் குறைவு வராமல் பார்த்

துக்கொண்டு வெளிப்பார்வைக்கு அவளை இறந்துவிட்டதாகத் தக்க தடயத்துடன் காட்டி விடுகிறேன். அதோடு அவர்கள் உருகிச் சாகட்டும். என் நண்பனுக்கு நான் செய்த வாக்குறுதியையும் நிறை வேற்றியதாக ஆகும். அப்படித்தான் செய்யவேண்டும்'' என்று யோசனை செய்துகொண்டே அங்கே கூடியிருந்த கூட்டத்தைக் கவனித்துக் கொண்டே இருந்தான். அப்போது அவனுக்குப் பின்னால் ''ஆ என் னருமைச் செல்லப்பா! நீயா இங்கு உட்கார்ந்திருக்கிறாய்? நான் நேற்றுக் காலைப் பத்திரிகையில் வந்த செய்தியைக் கேட்டு மிகவும் பரிதபித்துப் போய்விட்டேன். இதென்ன அநியாயம்! யார் இவ்விதம் செய்து உன் தலையில் வைத்துவிட்டார்களோ தெரியவில்லையே?'' என்று கூறுவது கேட்டது. உடனே செல்லப்பா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து ''ஆ! வா உட்காரு. வரப்ரசாதி! ஏது இப்போது இங்கு வந்தது?'' என்றான். வரப்ரசாதியும் ஆசனத்தில் உட்கார்ந்து ''நான் தினம் இவ்விடத்திற்கு வருவது வழக்கம். அதே போல் இன்றும் வந்தேன். தூரத்தில் பார்க்கும்போதே உன் சாயலாகவே இருந்தது. உடனே இங்கு வந்தேன். நீயாகவே இருந்தாய். என்ன அநியாயமப்பா இது? நீ எவ்விதம் ஜாமீனில் வந்தாய்? உன் பிதா வந்து பணத்தைக் கட்டினாரா?'' என்று பல கேள்விகள் கேட்டான். அவன் மனத்திலேயே உண்மை உதைக்கின்றது. அவன் அன்று இரவில் நீலாமணி யின் வீட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு போகும் தருணம் எதிரே வந்த செல்லப்பாவை அவன் இன்னானென்று அறிந்து கொள்ளவில்லை. மறுநாட் காலையில் பத்திரிகையின் மூலமாக அறிந்த பிறகே செல்லப்பா தான் அங்கு வந்த மனிதன் என்று நன்றாகத் தெரியவந்தது. அதனுடைய உண்மையை அறிந்துகொள்ள அவன் வெகு ஆவலுடையவனாக விருந்தமையால் ஒன்றையுமறியாத அன்னியன்போல் நடித்துப் பேசத் தொடங்கி, ''என்ன செல்லப்பா! எனக்கு நினைக்க நினைக்க ஆச்சரிய மாகவிருக்கின்றது. நீ எவ்விதம் அந்தத் தாசிவீட்டிற்குச்சென்றாயப்பா? உனக்குமவளுக்கும் பழக்கமுண்டா? அவ்வாறு நினைக்கவும் உன்மாதிரியும் குணமும் இடங்கொடுக்கவில்லையே! நீ அப்படியெல்லாம் கண்டபடி திரியும் மனிதனல்லவே! எவ்விதமாய் நீ அங்குச் சென்றாய்?'' என்று வெகு நயமாய்க் கேட்டான்.

இதைக் கேட்ட செல்லப்பா விசனத்தோடு பேசத் தொடங்கித் தனக்கு டீ பார்டி என்ற கடிதம் வந்ததுமுதல் இதுவரையில் நடந்த செய்தி வரையில் முற்றும் கூறினன். அது கேட்ட வரப்ரசாதி தனக்குள்ளேயே இன்பமும் துன்பமும் நிரம்பப் பெற்றவனுய், அவைகளை அடக்கிக்கொண்டு "ஹா! என்ன விநோதத் திருடனுகவல்லவா இருக்கின்றான்! அந்த மனிதனை நீ உண்மையான வீட்டுக்காரன் என்று எண்ணி மோசம் போனதை எண்ண என் மனம் பதறுகின்றது. அதோடு உன் பெற்றோரே இவ்விதம் சதியாலோசனை செய்ததாகக் கூறுவதைக் கேட்க எனக்கு வியப்பின்மேல் வியப்பாகவிருக்கின்றது. அப்படியுமவர்கள் செய்திருப்பார்களா?" என்று வியப்பே வடிவுற்றுப் பேசுவதுபோல் கூறினன். இதைக்கேட்ட செல்லப்பா "ஆஹா! என்ன பேசுகிறாயப்பா! அவர்கள் என்னிடமிருக்குமாதிரி உனக்குத்தெரியாதா? என்னைக்கண்டாலவர்களுக்கு எவ்விதமான பகையிருக்கின்றதென்பதை நீயறியமாட்டாயா? அவர்களுக்கு என்னைக்காண்பதும் என்செய்கையைக்காண்பதும் எல்லாம் என் பகைவரையும் பகைவரின் செய்கையையும் காண்பது போலிருக்கும். பத்மவல்லி தான் அவர்களுக்குமுக்கியமானவள். அவள்வாக்குத்தான்தேவவாக்கு; அவள் செய்வதுதான் மாற்றில்லாதது; இதனையெல்லாமறிந்த நீ இவ்வாறு கேட்பது ஆச்சரியமாகவிருக்கின்றதே. என்னை எவ்வாறேனும் அவர்களின் இஷ்டப்படித் திருப்பவேண்டுமென்ற கருத்தோடு இவ்வாறெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பது நன்றாக விளங்கவில்லையா? உம். அதற்கெல்லாமா நான் திரும்புகின்றவன்? நான் என்னை அவ்விதம் செய்த அவர்களைப் பழிக்குப்பழிவாங்காமல் விடப்போவதில்லை, இந்த வார்த்தையை நீ உன் அத்தையிடம் போய்த் தெரிவித்தாலும் நான் லக்ஷியம் செய்யப்போவதில்லை." என்று கூறி முடிக்குமுன் வரப்ரசாதி ஆத்திரத்தோடு பேசத்தொடங்கி, "ஆஹா! நானு இதனை உன் அன்னையிடம் தெரிவிப்பேன்? இன்னும் கேட்டால் நீதான் எனக்கு முக்கியமானவன். அவர்களுக்கு வயதாய்விட்டது; அவர்காலத்திற்குப்பிறகு நீதானே எனக்கு முக்கியமான மனிதன். ஆகையால் இந்தச்சதியாலோசனைகளை அவர்களே செய்திருக்கும் பக்ஷத்தில் நானும் உனக்குக்கூட விருந்து உபகாரம் செய்ய முன்வரும்படி என்மனம் என்னைத் தூண்டுகின்றது. உனக்கு நான் என்னுலான உதவியைச் செய்வேனே யன்றி

வேறு உபத்திரவம் செய்யவே மாட்டேன். அதைக்குறித்து நீ சிறிதும் கவலேயோ சந்தேகமோ கொள்ளவே வேண்டாம். இன்னும் கேட்டால் அந்தத்தாசி எனக்குச் சற்று பரிச்சயமானவளானதினுல் அவளிடத்திலும் நான் சிபார்சு செய்து நிஜமான குற்றவாளியைக்கண்டுபிடிக்கும் பரியந்தம் வழக்கை நடக்காதிருக்கும் படியான உத்தரவை அவளேயே கேட்டுக்கொள்ளும்படியாக நான் என்னுலான வரையில்கேட்டுச் செய்வேன். அதற்குச் சம்மதிக்கும்படி அவளுக்கு நான் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். அந்தக் கவலேயும் உனக்கு வேண்டாம்'' என்று மிகவும் அன்போடு கூறினுன்.

அது கேட்ட செல்லப்பா தான் எதிர்பாராத விதமாய்த் தனக்கு வரப்ரசாதியின் உதவி கிடைப்பதை யெண்ணி அளவற்ற மகிழ்ச்சியோடு அவனே நோக்கி, ''அப்பா! வரப்ரசாதி! நானும் என் சிநேகிதனும் சற்று முன் யோசித்ததில் உன்னேயும் எங்களுக்கு உபகாரத்திற்குக் கூப்பிடலாமா என்று எண்ணினேன். அதற்குத் தகுந்தாற்போல் நீயே வலிய வந்து விட்டாய். அதுபற்றி மிக்க சந்தோஷமாயிற்று. சரி, நான் நாளேக் காலேயில் உன்னே வந்து சந்திக்கின்றேன்'' என்றான். உடனே வரப்ரசாதி சரி அப்படியே செய் என்று கூறி அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றான். செல்லப்பா தான் எண்ணிய காரியத்திற்குத் தகுந்த துணேயும் அகப்பட்டதை எண்ணி மகிழ்ந்தவனுய் உட்கார்ந்திருந்தானெனினும் அவன் மனமுற்றும் அங்கு அருகிலிருந்த காந்தாமணியின்மீது சென்று பதிந்து கிடந்தது. அவன் எவ்வாறேனும் அன்று காந்தாமணியைக் கண்டு பேசவேண்டுமென்ற வேட்கை மீறியவனுய் அந்தவிடத்திலேயே உட்கார்ந்திருந்தான். சற்றுநேரங் கழிந்தவுடனே அங்கு கூடிய பெண்மணிகளின் கூட்டம் கலேந்துவிட்டது. அவர்கள் எழுந்து நேரே வி. பி. ஹாலே நோக்கிச் சென்றுவிட்டார்கள். அன்று அந்த ஹாலில் சகுந்தலா நாடகத்தை யாரோ நடிக்கப் போகிறார்கள். அதற்கு இந்தப் பெண்மணிகள் கட்டோடு சென்று ஹாலுக்குள் மறைந்துவிட்டார்கள. அந்தோ! செல்லப்பாவின் மனம் துடிதுடிக்கின்றது. அன்று எவ்விதமாவது அவளோடு பேசவேண்டுமென்று அவாக் கொண்டு காத்திருந்த செல்லப்பா இன்னது செய்வதென்பதை யறியாமல் தவித்த வண்ணம் சற்றுநேரம் அங்கு நின்று தயங்கித் தயங்கிப் பார்த்த

வண்ணம் திருப்பினான். தானும் அன்று அந்த ட்ராமாவிற்குப் போக லாமா என்று எண்ணினான். அங்கு சென்று அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தால் மனதிற்கு இன்னும் சஞ்சலமதிகரிக்குமே யென்று கலங்கினான். அவளிடம் பேசவும் சந்தர்ப்பம் வாய்க்குமோ வாய்க்காதோ என்று சந்தேகித்தான். அந்தோ கண்ட கண்மணியி னிடம் பேசுவதற்குக் கொடுத்து வையாத அபாக்யவந்தனாய் விட்டே னே," என்று பலவாறு எண்ணிய வண்ணம் நடக்கலானான்; தான் எங்குச் செல்வது, என்ன செய்வது என்பதை யறியாமல் சற்றுத் தயங்கினான். பின்னும் அவனுக்கு ஒரு யோசனை யுண்டாயிற்று. அதாவது "நாம் இன்று காந்தாமணியை எவ்வாறேனும் பார்க்காமல் செல்வது கூடாது. அவள் தனிமையில் நம்மை உதைத்தாலும் சரி அவளுடன் பேசி நாம் நிரபராதி என்பதை வெளிப்படையாகத் தெரிவித்து நம்மை மீண்டும் முன்போல் நேசமாகவே பாவிக்கும்படி செய்யவேண்டும். அதற்கு நாம் அடையாற்றுக்கே சென்று அங்கு அவள் வரும் வழியை நோக்கியவாறிருப்போம்" என்று தீர்மானித்த வனாய் நேரே அடையாற்றை நோக்கி நடக்கலானான். இவன் வெகு தூரம் கால் நடையாக அதிகமாய் நடந்ததில்லையாகையால் அவனுக்குக் கால் துவண்டுதள்ளாட ஆரம்பித்தது. உடனே அவன்ஒரு வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அடையாற்றுப் பங்களாவிற்குச் சிறிது தூரத்தில் இறங்கி வண்டிக்காரனுக்குச் சத்தத்தைக் கொடுத்துவிட்டு மெல்ல சந்தடி செய்யாமல் நடந்து பங்களாவின் வெளி கேட்டை யடைந்தான். அப்போது வீதிக்கதவு பூட்டப்பட் டிருந்தது. அவன்எல்லோரும் தூங்குவதாக அங்கிருந்த நிச்சப்தத்தா லறிந்துகொண்டான். "நாம் எவ்விதம் உள்ளே செல்வது? நாம் கதவைத் தட்டினால் நம்மைப் பணிமக்கள் வெறுக்காமல் கதவைத் திறப்பார்களோ மாட்டார்களோ! ஒருகால் இந்தச் செய்தியவர்க ளுக்குத் தெரிந்திருந்தால் அவர்கள் நம்மை அலக்ஷியம் செய்தோ அல்லது உள்ளே சென்று தமது எஜமானனுக்குத் தெரிவித்தோ இன்னும் ஏதேனும் அவமானப் படுத்தினாலும் படுத்துவார்கள். எல்லாவற்றிற்கும் நாம் ஒன்று செய்யவேண்டும். அதாவது முத லில் நான் கதவைத் தட்டித் திறக்கச் செய்து யாரேனும் வந்து யார் என்று கேட்டால் நான் செல்லப்பாவைத் தேடிக்கொண்டு வந் தேன் என்று தெரிவித்து அதற்கு அவர்கள் கூறும் பதிலிலிருந்து

அவர்கள் நம்மிடம் கொண்டுள்ள எண்ணத்தைத் தெரிந்து கொள் வோம்'' என்று யோசித்தவண்ணம் தனது கைக்குட்டையைப் பிரித்து முகத்தைத் துடைப்பவன்போல் முகத்தில் ஒரு கையால் மறைத்துக் கொண்டு கதவைத் தடதடவென்று தட்டினன். உடனே கதவிற்கு உட்புறம் ஒரு வேலைக்காரன் தோன்றி யாரது என்று கேட்டான். உடனே செல்லப்பா தன் குரலை மாற்றிக்கொண்டு பேசத்தொடங்கி ''அப்பா! இந்த வீட்டில் என்னுடைய நண்பன் செல்லப்பா என்பவர் இருக்கிறார். அவரை நான் பார்க்கவேண்டும். அதற்காக வந்திருக்கின் றேன். அவர் எங்கிருக்கின்றார்? சற்றுக் கூப்பிடுங்கள்'' என்றான். இதைக்கேட்ட வேலைக்காரன் ஏளனமாய் நகைத்துக்கொண்டே ஓஹோ! அந்தத் திருடனைத் தேடிக்கொண்டு நீயும் ராத்திரிவேளை யில் திருடனைப்போலவே வந்தாயா? போய்யாபோ! இங்கு அந்த மனிதனில்லை. போலீஸ் ஜெயிலில் போய் பார்த்தால் அவன் கிடைப் பான். அந்தத் திருட்டு மனிதனை நிரம்பவும் யோக்கியன் என்றெண்ணி எங்கள் எஜமானியம்மாள் ஏமாந்து விட்டார்கள். அவனுடைய யோக் யதை நாடெங்கும் தெரிந்தபின்கூட உனக்குத் தெரியவில்லையா? பலே ஆசாமி அவன்! எங்கள் வீட்டு எஜமானியம்மாளையே கொள்ளை யடிக்கவேண்டுமென்ற கருத்தோடு தனுக்காக சிநேகம் செய்து கொண்டு வந்தான். அதற்குள் சில்லறை நகைகள் விஷயத்திலேயே அவன் அகப்பட்டுக் கொண்டான். இனி அவனுடைய கொள்ளை எங்கள் வீட்டில் பலிக்காது. அவனைக்கண்ணாலே பார்த்தோமானல் போலீஸா ருக்கு மேல் நாங்கள் அவனை உதைத்து வெருட்டுவோம். அவனிடம் எங்களுக்கு அவ்வளவு ஆத்திரம் உண்டாயிருக்கிறது. எங்கள் எஜ மானியம்மாள் நிரம்ப நல்ல மனுஷி; யாரையும் பிரியத்தோடு நம்பி விடுவார்கள். அப்படியே இந்தத் திருடனையும் நம்பி மோசம்போக விருந்தார்கள். நல்லவேளையாய் சாமிதான் காப்பாற்றினர். அந்தத் திருடனைப்பற்றியும் அவன் நடத்தை யோக்கியதை முதலியவைகளைப் பற்றியும் யாரோ ஒரு புண்ணியவான் எங்கம்மா ஐயா இரண்டுபேருக் கும் விவரமாகக் கடுதாசி எழுதினர்கள். அப்போது அந்தத் திரு டன் இருந்த மாதிரியில் அந்தக் கடிதத்தை யாரோ க்ஷாத்திரத்திற் காக எழுதியதாக எண்ணி அவனை அவர்கள் வீட்டிலேயேவைத்திருந் தார்கள். அவனுடைய உண்மை வெளியாகிய பிறகு அந்தக்

கடிதத்தின் உண்மையை யறிந்தார்கள்'' என்று பேசிக்கொண்டே வருகையில், நிரபராதியாகிய செல்லப்பாவின் தேகமும் தலையும்சுழல ஆரம்பித்துவிட்டன. அவன் உண்மையில் இவ்விதத் துஷ்டத் தனத்தை எதுவுமறியாத பரமசாதுவாகையினால் அவனுக்கு இவன் சொல்வதெல்லாம் காதில் நாராசத்தைக் காய்ச்சி விடுவதுபோல விருந்தது. அவன் கால் முதல் தலைவரையில் வியர்வை குபீர்குபீர் என்று பொங்கிப் பெருகி வெள்ளமாக ஓடியது. அவன் தேக முற்றும் அக்னியின் மத்தியில் நிற்பதுபோல் பற்றி எரிந்தது. ஆத்திரமும் அவமானமும் அவன் ஹ்ருதயத்தைப் பிளந்தன. அவனுடைய அப்போதைய நிலைமையும் தத்தளிப்பும் இத்தகையனவென்று சொல்வதற்கே சாத்யமில்லாதிருந்தன. அவன் தன்னைப்பற்றிப் பணிமக்கள் முதல் எல்லோரும் இவ்வித வெறுப்பும் அலக்ஷியமும் கொண்டு கேவலமான பதங்களை உபயோகித்து உதாசீனமாகப் பேசும்படியான கதிக்குக் கொண்டுவந்த தனது பெற்றோரின்மீது அவனுக்கு அப்போதுண்டான சீற்றத்திற்கு ஓர் நாக சர்ப்பத்தின் சீற்றமும் ஈடாகாதென்றே கூறலாம். அவன் தன்னை யொருவாறு தேற்றிக்கொண்டு மீண்டும் பேசத்தொடங்கி, "ஏனப்பா! நீ சொல்வதெல்லாம் எனக்கு மிகவும் வியப்பாக விருக்கின்றதே! நானுமவனும் சுமார் இருபது வருஷ காலமாக ஒருயிரும் ஈருடலுமாகப் பழகியவர்களாயிற்றே, அவனிடம் நான் பழகிய வரையில் அவன் மிகவும் பரிசுத்தமான மனத்துடனும் திருட்டுப்புத்தி என்பது த்ருணமுமில்லாத சுத்தாத்மாவாயிற்றே. அவன் கால வியலுக்கு ஏற்றவாறு மேனாட்டு நாகரிகத்தை முற்றும் கைப்பற்றியிருக்கிறான் என்ற வேறுபாட்டைத் தான் நான் அவனிடமறிந்தேனேயன்றி அவனை வேறு எந்த விஷயத்திலும் சிறிதும் விகற்பமாகவே நான் எண்ணமாட்டேன். அவனுடைய குணமுற்றும் நான் நன்றாக அறிந்திருக்கிறேன். அவன் மஹா விவேகி. பரமசாது. தீய வழியில் அவன் மிதித்த மண்ணும் செல்லாதென்றே நான் திட்டமாகக் கூறுவேன். நான் நான்கு நாளாக ஊரிலில்லை. இன்றுதான் வந்தேன். உடனே அவனைப் பார்க்காமலிருக்க என்மனம் இடந்தரவில்லை. ஆகையால் நான் ஓடிவந்தேன். நீ சொல்வதைப் பார்த்தால் அவன் ஏதோ பெருங்குற்றத்தைச் செய்துவிட்டதாகத் தெரிகின்றதே. அவன்

அவ்வாறு எதுவும் செய்தேயிருக்கமாட்டான். இதில் ஏதோ மோசடி தான் நடந்திருக்கவேண்டும். விவரத்தைச் சொல் கேட்போம்" என்று கேட்டான்.

அதுகேட்ட வேலைக்காரன் செல்லப்பா திருடிய விவரத்தை யெல்லாங்கூறி எனது எஜமானியம்மாள் முன்னால் தனக்கு வந்த கடிதத்தைக்கண்ட பிறகும் அவனிடத்தில் வெறுப்புக்கொள்ளாமல் பக்ஷமாகத்தான் நடத்திவந்தார்கள். எஜமானுக்கு மாத்திரம் அப்போதே சிறிது இவன் மீது சந்தேகந்தான். தன் பெண்ணினிடத்திலும் அவனை இவ்வீட்டை விட்டு விலக்கிவிடவேண்டுமென்று பலதரம் கூறியும் பெண் அதைக் கேளாமல் வைத்தப் பிரியத்தையே மேலாக எண்ணி அவனை விடாமலிருந்தார்கள். பிறகு அந்தத் திருடன் கைப் படவே "நான் வீண் அபவாதத்தினால் ஜெயிலிருக்கின்றேன். எனக்கு உதவிக்கு நீ வரவேண்டும்" என்று எழுதிய கடிதம் வந்தது. அதைப் பார்த்த பிறகே முன் வந்த கடிதத்தின் உண்மை விளங்கிற்று. அவனிடம் எங்கம்மா வைத்துள்ள பிரியத்திற்கு அளவே இல்லை. அந்தப் பாவியின் துர்ப்புத்தியை யறியாமல் எங்கம்மா ஏமாந்ததை எண்ணி எங்களுக்கெல்லாங்கூட விசனந்தான். திருட்டு புத்தியுள்ளவர்களும் மோசக்கருத்து வைத்துக்கொண்டு பழகும் மனிதர்களும் வெகு நல்லவர்கள்போல வேஷம்போட்டு நல்லவர்களை ஏமாற்றுவது அவர்களுடைய தொழில்போலிருக்கின்றது. நேரமாய் விட்டது. எங்க எஜமான் திட்டுவார்; நான் போகிறேன். உன் பேச்சையும் உன்னையும் பார்த்தால் நல்லவனாகக் காணப்படுகிறாய். அந்தத் திருடனோடு நீ இனிமேல் பழகாதே. உனக்கும் அவன் சகவாசம் படிந்துவிடும். நீ யாரடா எனக்குச் சொல்வதென்று நீ கேட்கலாம். எங்களுக்கு அவன்மேல் அவ்வளவு வெறுப்புண்டாய்விட்டது. அதனால் சொன்னேன்" என்றான்.

இதைக்கேட்ட செல்லப்பா மனம் துடித்துக் கண்ணீர் விட்டான். பின் அதை அடக்கிக்கொண்டு பேசத்தொடங்கி, "ஏனப்பா! நீங்கள் எல்லாரும் அவனுடன்கூடப் பழகியும் அவனுடைய உண்மையான குணத்தை யறியாமல் இவ்வாறு வெறுப்புக் கொள்ளலாகுமா? அவனுக்கு இந்த அபாண்டமானபழி வேண்டுமென்று விதி வழியாலும் யாரோ செய்த மோசடியாலும் வந்ததேயன்றி

உண்மையானதல்லவே அல்லவென்பதை நான் எத்தனைதரம் வேண்டுமானாலும் சொல்வேன். அவன் சாதாரண மனிதருடைய வீட்டுப்பிள்ளையா? பெரிய ஜெமீந்தாருடைய புத்திரனல்லவா? அவன் தினம் தன்கையினால் பிறருக்குக் காசைக் கணக்கிடாமல் வாரி இறைப்பானே. அவனுக்கிருக்கும் மனதிற்கு அவன் பிறருக்குக் கொடுப்பானேயன்றி அவனா திருடுவான். ஐயோ சேச்சே. இது சுத்த அபாண்டந்தான். இந்த அபாண்டமான பழி அவனைவிட்டு நீங்காமல் என்றுமிவ்வாறே இருக்காது. அப்பொழுது நீங்களே கூறுவீர்கள். அவன் குற்றம் செய்தவனன்று. நிரபராதி என்று ருஜுப்படுத்தாமல் போவதில்லை. ஆஹா! அவன் காலில் ஒட்டிய தூசிகூட இத்தகைய எண்ணமும் எண்ணுதென்பதை அவனுடன் பழகிய நானறிவேன்; அந்த உண்மையைச் சீக்கிரத்திலேயே கண்டுபிடித்தும் விடுகிறேன். அப்போது உன் எஜமானியம்மாள் நம்புவார்களா? பிறகு பழைய மாதிரி பிரியத்துடன் நடப்பார்களா?" என்று மெல்ல நயமாகக் கேள்விகளைப் போட்டான்.

இதைக்கேட்ட வேலைக்காரன் "உம். எங்க எஜமானியம்மாதான் அந்தத் திருடனிடத்தில் தன் பிரியத்தை யெல்லாம் கொள்ளை கொடுத்துவிட்டார்களே! மீண்டும் அவனிடமிருந்து அதைஇப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாக வாங்குகின்றார்கள் என்றாலும் உள்ளூற அந்தம்மாள் அவனை மறக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் தகப்பனாரின் பிரியப்படியே நடப்பவர்கள். அவருக்காக இத் திருடனை அடியோடு வெறுத்துவிட வேண்டியது. பாவி எங்கம்மாளைப் பலவிதத்திலும் ஏமாற்றிவிட்டான். அந்தம்மாள் தனது தந்தை அவனைப்பற்றிய முதல் கடிதத்தைக் கண்டவுடனே தன்னை அவனிட மிருந்து விலகும்படி கூறியதை அவனிடமிருந்த பிரியத்தினால் தானே வெறுக்காமலிருந்தார்கள். அவன் சிறைவாசம் செய்வதை இப் போது கைமெய்யாகக் கண்டறிந்தார்களாதலால் அவர்கள் மனம் முறிந்து வருகின்றது. அந்தத் திருடனை வீணாகக் குற்றம் சாட்டியதாக நீ சொல்வதில் எங்களுக்கு நம்பிக்கையே இல்லை. அவன் பக்காப் பேர் வழி. அவனா திருட்டு புத்தி இல்லாதவன்? அவன் திருடாமல் எவ்வாறு பிடிபட்டான்? அவனைத் தாசி நீலாமணி, தன் வீட்டில் நகையும் கையு மாய்ப் பிடித்துவிட்டாளே! இவையெல்லாம் வீண் பொய்யாகுமா?

போய்யா போ! எனக்குத் தூக்கம் வருகிறது; எஜமான் பார்த்தால் திட்டுவார். நான் போகிறேன்" என்று கூறியவாறு கதவைச் சாத்தித் தாளிட்டுப் பூட்டிக்கொண்டான்.

ஆஹா! வெளியில் தனிமையாக இருளில் நின்ற செல்லப்பாவின் மனமானது பலவிதமான கலக்கத்திலாழ்ந்துவிட்டது. அவனுக்குத் தன்னைப் பிறர் இகழ்ச்சியாகக் கூறுவதைக் கேட்கக்கேட்க தன் பெற்றோரின்மீதே கோபம் அதிகமாகப் பொங்குகின்றது. அவன் காந்தாமணியின் மன நிலைமையும் அவளுடைய பெற்றோரின் மன நிலைமையும் எவ்வாறிருக்கின்றதென்பதை அறிந்துகொள்ள அவா உள்ளவனுயிருந்தான்; அதையும் அறிந்துகொண்டான். பின்பு அவன் தனக்குள் என்னை எவ்வாறேனும் அவர்கள்வசப்படுத்தவெண்ணி, முன்னெச்சரிக்கையாகவே என்னைப்பழித்து என் கண்மணிக்கும் அவள் தந்தைக்கும் கடிதமெழுதி அவர்கள் என்னை வெறுக்கும்படியாகச் செய்திருக்கிறார்கள். எனக்குத்திடீரென்று இத்தகைய அபாண்டமானபழி வந்ததுமாத்திரம் தெரிந்திருக்குமானல் அவர்கள் கேவலம் இவ்விதம் என்மீது துர் எண்ணம் கொள்ளமாட்டார்கள். அதற்கு இடமுமில்லை. என்னை நிராகரித் திருக்கவுமாட்டார்கள். என்னை இவ்விதம் அவமானப்படுத்திய பின்னரும் அவர்கள் என்மீது பக்ஷம் காட்டப்போகிறார்களே என்ற பொறாமையினல் முன்னதாகவே அதற்கும்கல்லைப்போட்டிருக்கின்றார்கள். உம்...இருக்கட்டும். நானு இந்தப் பூச்சி மிரட்டுக்குப்பயப்படுகின்றவன். ஆஹா! என்தேகம் இப்போது எவ்விதம் துடிக்கின்றதோ அதே போல் அவர்களை நான் துடிக்கச் செய்யாவிட்டால் என் பெயர் செல்லப்பாவன்று" என்று பலவாறு எண்ணமிட்டவண்ணம் இனி எங்குச் செல்வது என்று யோசிக்கலானான். நேரே சைதாப்பேட்டைக்குச்சென்று தன் வயிற்றெரிச்சல் தீர தன் மனம் போனபடியே ஏதேனும் செய்துவிட்டு வந்துவிடலாமா என்றும் நினைக்கின்றான். மீண்டும், தான் மாத்திரம் இந்த ராத்திரி வேளையில் தனிமையில் செல்வதெப்படி என்று சற்று அஞ்சுகிறான்; இவ்வாறே குழம்பிக்கொண்டு மனந் துடித்தவண்ணம் அவ்விடத்தைவிட்டு மெல்ல நடக்கவாரம்பித்தான்; ரத்தினசாமி வீட்டிற்கே செல்வதென்று தீர்மானித்துக்கொண்டு அந்தத் திசையை நோக்கி நடக்கலானான். நடக்கநடக்க வழி தொலையவில்லை. அவனையுமீறிக் கால்வலி எடுத்துக்கொண்டது. அப்போது

சிறிது தூறலும் காற்றும் சேர்ந்து அடிக்கவாரம்பித்தன. அவன் கையில் குடையுமில்லை. தூறல் பலமாகவிழுந்தபடியால் அவனுடைய தலையும் சட்டையும் நனையவாரம்பித்தன. காற்றும் சிலீர் சிலீர் என்று வீசியதால் குளிரும் சற்று அதிகமாகவே, அவனுக்குத் தேகம் நடுங்க வாரம்பித்தது. அவனால் வேகமாக நடக்கமுடியவில்லை. குளி ரின் உபத்திரவத்தால் அவனுக்குக்கால்கள் பின்னலிட வாரம்பித்தன. அவனால் முடிந்தவரையில் அவன் நடந்து பார்த்தான். நிஜார், சட்டை முற்றும் நனைந்துவிட்டபடியாலும் குளிரினாலும் காற்றும் தூறலும் முகத்திற்கு நேராகவடிப்பதனாலும் அவன் நடை அடியோடு தடைப் பட்டு விட்டது. அவனுக்கு மூச்சுத் திணறுவதுபோல் ஆய்விட்டது. அந்த நிலையில் அவன் "இனி நடக்காமல் யார்வீட்டுத் திண்ணையிலாவது சிறிது தங்கிவிட்டுச் சற்றுத்தூறல் நின்றபின்னரே செல்வதுதான் நல் லது. வாடகைக்காவது வண்டி கிடைத்தால் வைத்துக்கொண்டு போக லாம். அதனையும் காணவில்லையே! என்னசெய்வது? ஐயோ! சங்கடமே. இந்தநிசி வேளையில் மழையும்கூட வரவேண்டுமோ?" என்று சிந்தித்துக் கொண்டே அவ்வீதியிலிருந்த ஒரு வீட்டின் குறட்டில் ஏறி நின்றான். மழை பின்னும் பலமாகப் பெய்ய வாரம்பித்தது. அவன் அந்த வீட்டுத் திண்ணையின் மீது மெல்ல உட்கார்ந்தான்.

அந்த வீட்டிற்குள்ளே யாரோ பைரவி ராகத்தை வெகு இனி மையாகப்பாடுவது அவன் காதில் விழுந்தது. செல்லப்பாவுக்குச் சங்கீ தத்தினிடத்தில் அதிகப் பிரியமாகையாலும் தானும் நன்றாகத் திறமை யோடு பாடுவானாதலாலும் அவனுடைய செவியும் மனமும் அதில் ஈடுபட அவன் அந்த வீட்டு ஜன்னல் அருகில் சென்றான். கண் ணுக்கு எதுவும் புலப்படவில்லை என்றாலும், காதுக்கு வெகு மாதுர்ய மான விருந்து கிடைத்தது. அந்தச் சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டே அவன் ஆநந்தமயமாய் உட்கார்ந்திருக்கிறான். அவன் மனத்திலிருந்த கலக்கமெல்லாம் இச்சங்கீதம் கேட்டவுடனே சூரியனைக்கண்ட இருள் போல் மறைந்து விலகியது. அவன் தன்னைமீறிய ஆநந்தத்தால் மெய்ம்மறந்து அந்த ராகத்திலும், பாடும்திறமையிலும், குரலின்இனி மையிலும் மனத்தை லயிக்கவிட்டவனாய் "ஆஹா! இச்சங்கீதத்திற்கு இருக்கும் சக்தி வேறு எதற்குமில்லை என்றே சொல்வேன். என் மனம் சற்று முன் பட்ட கஷ்டமென்ன? இப்போது அனுபவிக்கும்

ஆநந்தமென்ன. அடடா! நம்முடைய பத்மவல்லியின் குரல் போல அவ்வளவு இனிமையாகவும் சுத்தமாகவுமிருக்கின்றதே; எந்தப் புண்ணியவதி பாடுகின்றாளோ !" என்று பலவாறு எண்ணிக்கொண்டே உட்கார்ந்திருக்கிறான். அப்போது அந்த வீட்டின் வீதிக்கதவு திறக்கப்பட்டது. உடனே வயது முதிர்ந்த ஒரு பெண்பிள்ளை உள்ளிருந்து வெளியே வந்தாள். அப்போதும் மழை பெய்துகொண்டிருந்தது. செல்லப்பா உள்ளிருந்து யாரோ மனிதர் வருவதைக் கண்டவுடன் ஜன்னலைவிட்டுவிலகி வந்து தூர உட்கார்ந்தான். வெளியே வந்தபெண்பிள்ளை "சங்கீதத்தினிடத்தில் பிரியமில்லாத மனிதர்கள் மிருகத்திற்குச் சமதையானவர்கள்தான். ஆஹா! சங்கீதத்தில் பிரியமுள்ளவர்கள் மனதிற்குச் சதா ஆநந்தத்தை அடைந்துகொண்டே இருக்கமாட்டார்களா? ஐயா! தாங்கள் சங்கீதப் பிரியர்போல் காணப்படுகிறீர்களே! அந்த ஆசை இருந்தால் தான் இவ்வாறு ஒண்டிக்கொண்டாவது கேட்கச் சொல்லும். நல்லது, தாங்கள் தாராளமாய் உள்ளேயே வந்து கேட்கலாகுமே. நமது குழந்தை தான் பாடுகின்றது. தாங்கள் பேதமின்றி உள்ளேயே வந்து கேட்கலாம். வாருங்கள். இவ்விதம் பிரியமுள்ளவர்கள் கேட்டு ஆநந்தித்தால்தான் சந்தோஷம். பணத்தை ஆயிர மாயிரமாகச் செலவிட்டுச் சங்கீதம் கற்றுக்கொடுத்ததைக் கேட்டுப் பிறர் சந்தோஷித்தால் தானே மனதிற்குத் திருப்தியாகவிருக்கும். வாருங்கள் உள்ளே" என்று முன்பின்னறியாதவள்போலல்லாமல் வெகு பழக்கமுள்ளவள் போலப் பேசி அழைத்தாள். இதைக் கேட்ட செல்லப்பாவுக்கு மனத்தில் இன்னது பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவன் மனம் மயங்கினான்; சங்கீதத்தினிடத்தில் கொண்ட ஆசையினால் உள்ளே சென்று கேட்கலாமா என்று நினைத்தான். அவன் தயங்குவதைக்கண்ட அந்த மாது மீண்டும் வற்புறுத்தி அழைத்தாள். தன்னை இன்னானென்று அறியாத அவள் இவ்வளவு பலவந்தித்து அழைப்பதைக் கண்டசெல்லப்பா "ஒருகால் இவர்கள் என்னை ஏதேனும் மோசக்கருத்தோடு அழைக்கின்றார்களோ" என்று எண்ணி "என்னபதில் கூறுவது, உள்ளே செல்வதா வேண்டாமா?" என்று தன் மனத்தையே கேள்வி கேட்கலானான்; பிறகு மெல்லப் பேசத் தொடங்கி "அம்மா! நான் வழியோடு செல்கையில் மழை அதிகரித்து விட்டபடியால் சற்று இங்கே தங்கினேன். தங்கிய இடத்தில் சங்கீ

தம் பாடுவது கேட்டதனால் ஜன்னலருகிலிருந்து கேட்டேன். அப்படியே நன்றாகக் கேட்கின்றது; உள்ளே வரவேண்டுவ தவசியமில்லை. நான் இப்படியிருந்தே கேட்கிறேன். மழை சற்று நின்றதும் நான் போய்விடுகிறேன்." என்றான்.

இதைக் கேட்ட அந்த மாது சிரித்துக்கொண்டே "ஏதோ நீங்களும் ஆசையோடு கேட்டமையால் நான் உள்ளே வாருங்களென்று கூப்பிட்டேன். தங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் நான் பலவந்தப் படுத்தவில்லை. வந்தால் வாருங்கள்; இல்லையேல் உங்களிஷ்டம்" என்று மூடுக்காகக் கூறினாள். அப்போது உள்ளிருந்துவரும் சங்கீதம் இன்னும் வெகு இனிமையாகவும் அழகாகவும் கேட்பதற்கு ஜில்லென்றும் இருந்தது. செல்லப்பா கீழே இறங்கி மழையைப் பார்த்தான். அது விட்டபாடில்லை. "சரி நாம் இங்கு உட்கார்ந்திருப்பதைவிட உள்ளே சென்று சங்கீதம் கேட்பதில் பிசகொன்றுமில்லையே" என்று எண்ணியவனாய் "அம்மா! உங்கள் பிரியப்படியே வந்து சற்றுக் கேட்டுவிட்டுச் செல்கிறேன்." என்று கூறியவாறு உள்ளே சென்றான். அந்தப் பெண் பிள்ளையும் வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்து செல்லப்பாவுக்கு வழி காட்டிக்கொண்டே சென்றாள். அவ்விடத்தில் முன்கட்டை அடைந்ததும் அது தேவேந்திரனது அரண்மனை போல் பலவிதமான அலங்காரங்களால் நிரம்பப்பெற்று வெகு விநோதக் காட்சியாக விருந்தது. அந்தக் கூடத்தில் ஓர் சோபாவின்மீது தேவலோகத்து ரம்பையோ என்று ஐயுறும்படியான வனிதாரத்னம் வெகு உல்லாசமாக உட்கார்ந்துகொண்டு தம்புரா ஸ்ருதி போட்டுக்கொண்டே முன் குறித்த பைரவி ராகத்தைப் பாடிக்கொண்டே இருக்கிறாள். அவ்விடத்தில் இவ்விருவரைத் தவிர வேறு மனிதர்களே இல்லை. இந்தச் சிங்காரக் கூடத்தையும் அங்கு உட்கார்ந்து பாடும் பாவையையும் கண்ட செல்லப்பா அசைவற்று வியந்து நின்று "ஐயோ! இதென்ன நாம் சங்கீதத்தின் மீதுள்ள ஆசையால் உள்ளே வந்துவிட்டோமே! இங்கு இருக்கும் மாதிரியைப் பார்த்தால் இது கேவலம் தாசி வீடுபோலல்லவா தோன்றுகின்றது!சே! நாம் உடனே வெளிக் கிளம்பிவிட வேண்டும். பாட்டும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். என்மனம் மேனாட்டுநாகரிகத்தில் முற்றும்காடியிருந்தபோதிலும் பரஸ்திரி கமனம் செய்ய சற்றும் சம்மதிப்பதில்லை. பஞ்சபூத சாக்ஷி

யாக என் கண்மணியை நேசித்தேனேயன்றி கேவலமான சிற்றின் பத்திற்காக நான் வேறெவரையும் நேசிக்கவில்லை,'' என்று சிந்தித்த வண்ணமே வந்த வழியே நடக்கவாரம்பித்தான். இவன் இங்கு வந்தவுடன் வியந்து பார்த்த குறிப்பையும், செல்ல யத்தனித்ததை யுங் கண்ட அந்தப் பாவை சடக்கென்று தம்புராவை வைத்துவிட்டு எழுந்து வந்து செல்லப்பாவை வெளியே செல்லவிடாமல் தடுத்து மறுத்து "அன்பரே ஏன் செல்கின்றீர்? வாரும் உள்ளே; தாங்கள் வந் திருப்பதை நோக்கியல்லவா நான் இத்துணை நேரம் ச்ரமத்தையும் பாராமல் பாடினேன். தாங்கள் ஆவலோடு வந்து மீண்டும் போகலா குமோ?'' என்று கூறியவாறு புன்முறுவல் பூத்த முகத்துடன் செல லப்பாவை நோக்கினாள்.

குடி முதலிய அட்டூழியங்களில் செல்லப்பா எவ்வளவு தான் பழகிக் கெட்டுவிட்டவனாலும் இந்த விஷயத்தில் அவன் மனம் மிக வும் பரிசுத்தமாகவும் நிஷ்களங்கமாகவும் உள்ளதாகையால் அவன் சற்றும் எதிர்பாராத விதமாய் அந்தப்பெண் வலியவந்து அக்ரமமாகத் தன்னைத் தடுப்பதை நோக்க, அவன் அப்படியேதிடுக்கிட்டுப்ரமிமித்து விட்டான். என்ன விதமாய்த் தான் இந்தப் பிசாசினிடமிருந்து தப்பு வதென்கிற பயம் அவனை வந்து கவ்விக்கொண்டது. அவர்கள் தாசி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை செல்லப்பா அறிந்துகொண் டான். அவன் மனத்தில் சொல்லமுடியாத கவலையும் எதிர்பாராத புதிய கிலியும் சூழ்ந்துகொண்டன. தான் முதலில் நினைத்தபடியே தன்னை வஞ்சனைக் கருத்தோடு தான் அந்த மாது அத்தகைய உருக் கத்துடன் அழைத்தாள் என்பதையு மறிந்து கொண்டான். இப் பொழுது என்ன செய்வதென்பதை அறியாமல் விழிக்கின்றான். திமிறிக்கொண்டு ஓடி விட மார்க்கமில்லாமலும் அந்தப் பெண் எதிரில் மறைக்கின்றாள். இந்தத் தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வான் பாவம்! அவன் தன் தலை குனிந்தபடியே பேசத்தொடங்கி, "அம்மணி! நான் ஒரு முக்கியமான அவசர ஜோலியாகச் செல்கின்றவன். வழியில் மழை வந்துவிட்டபடியால் சற்று இங்கு தங்க நேர்ந்தது. நான் உங் கள் சங்கீதத்தைக் கேட்டே இங்கு வந்தவனல்லன்; நான் போகிறேன் வழியை விடுங்கள்'' என்றான்.

இதைக் கேட்ட பெண்மணி முன்னிலுமதிகமான நகைதவழ்ந்த வதனத்தோடு பேசத்தொடங்கி, "ஐயா! தாங்கள் என்ன பெண் பிள்

ளைகளைப் பாராதவர்போலப் பேசுகின்றீர்களே. தாங்கள் முதலில் மழைக்காக வந்தீர்கள்; பிறகு சந்தோஷமாகவிராமல் என்னமோ விழிக்கின்றீர்களே வாருங்கள்; இந்த ஆசனத்தில் உட்காருங்கள்'' என்றுகூறி அவன் கையைப்பிடித்து இழுக்க முயன்றாள். இந்த ஜாடையை யறிந்த செல்லப்பா உடனே அவ்விடத்தினின்றும் விலகிக்கொண்டு கோபத்தோடு அந்தப் பெண்ணைப் பார்த்தவண்ணம், 'ஓஹோ! உங்கள் ஜாதிஇன்னதென்பதை இப்போதறிந்துகொண்டேன். வீணே நீங்கள் இவ்வாறு என்னை உபத்திரவிக்க வேண்டாம். நான் போகவேண்டும். வழி விடுங்கள். உங்களிஷ்டப்படி நடப்பவன் நானல்லன்'' என்று கடுமையாகக் கூறும்போது வீதியிலிருந்து, ''சந்திரா! சந்திரா!'' என்று ஒரு குரல் கேட்டது; உடனே இரு பெண்மணிகளும் நடுநடுங்கிப் போய் ''ஐயோ! முதலியார் வரமாட்டார் என்று சொன்னதாக ஆள்தெரிவித்தானே; அதோ அவர் குரல் கேட்கின்றதே. இந்தத் தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வோம். வேறு அன்னியன் உள்ளே இருப்பதைக் கண்டால் முதலியார் நம்மை ஹதம் செய்து விடுவாரே! என்ன செய்வோம்!'' என்று எண்ணித் துடித்தார்கள். உடனே இமைப்பொழுதில் அந்தப் பெண் துணிகரமாக செல்லப்பாவின் கையிலணிந்திருந்த சீமைக்கமல மோதிரத்தைக் கழற்றி அகப்பட்டது அதிர்ஷ்டமென்று எண்ணி மடியில் வைத்துக்கொண்டு அதோடு விடாமல் பெருத்த குரலால் ''ஐயோ! ஐயோ! என்ன அநியாயம். அக்ரமக்காரப் பாவி! சண்டாளன் மழைக்காக ஒண்டவந்தவன்போல் இடம் கேட்டு அடாத அட்டூழியத்தைச் செய்ய முன் வந்துவிட்டானே! அடே பாவி! சண்டாளா! நீ வெளியே சென்றுவிடடா! என்னைக் கொல்லவேண்டாமடா! கொலை பாதகா! என் கண்ணான முதலியார் இன்று வாராமல் நிற்க வேண்டுமோ! ஐயோ! பெண் பேதைகள் நாங்கள் உன் கையில் எமன் வாயில் அகப்பட்டதுபோல் அகப்பட்டுக் கொண்டோமே! அடே துஷ்டா! என்னைப் பலாத்கரிக்காமல் ஓடிவிடடா! ஐயோ! அம்மா! நீ வீதிக் கதவைத் திறந்து வீதியிலிருப்பவர்களையாகிலும் உதவிக்குக் கூப்பிடலாகாதா? பாவி வழியையும் மறைக்கின்றானே! என்ன செய்வேன்? அடே சண்டாளா! என்னைத் தொடாதேயடா!'' என்று அமக்களமாகப் பெருத்த ஆபத்தான நிலைமை வந்துவிட்ட மாதிரியாகக் கத்தவாரம்பித்துவிட்டாள்.

எதிர்பாராத இந்த ஆபத்தைக்கண்ட செல்லப்பா, இன்னதென்று அறியக்கூடாமல் திகைத்துத் திப்பிரமை கொண்டு நின்றுவிட்டான். இத்தருணம் அந்தப் பெண்ணின் தாயார் சரேலென்று ஓடி வீதிக் கதவைத் தான் யாதுமறியாதுபோல் திறந்துகொண்டே கூச்சலிடத் தொடங்கினாள். வீதியிலிருந்து கதவைத் தட்டிய முதலியார் இவ்விடத்திலிருந்துவரும் கூக்குரலைக் கேட்டுப் பதைத்தவண்ணம், "ஆ! சந்திரா! சந்திரா! உள்ளே உனக்கென்ன ஆபத்து வந்துவிட்டது. இதோ கதவைத் திற; அந்தச் சண்டாளப் பாவியை ஒரே அமுக்காக அமுக்கி விடுகிறேன்" என்று கூவிக்கொண்டே இருக்கையில் கதவு திறக்கப்பட்டதும், ஆக்கிரத்தோடு உள்ளே வந்து "என்ன! என்ன!" என்று கேட்டுக்கொண்டே அந்த சந்திரவதனை கூக்குரலிடுவதையும், அவள் தாய் வாய்க்கு வந்தபடி திட்டுவதையும், செல்லப்பா நிற்பதையும் கண்டதும் "ஓ" என்று ஒரு கர்ஜனை செய்தவண்ணம் "அடே கிராதகா! நீயாடா இங்கு வந்து தகாத காரியத்தைச் செய்து இந்தப் பெண்மணியைக் கெடுக்க எண்ணினாய்? ஆஹா! என் குடல் கொதிக்கின்றது. என் கண்மணியாகிய காந்தாமணியை ஏமாற்றி வஞ்சகமாக உன்னுடையத் திருட்டுத் தனத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு அவளிடம் வெகு நல்லவன்போல் பழகி, அறியாத குழந்தையின் மனத்தைக் கலைத்து அவளை உன் மோகத்தில் மயங்கச் செய்ததுமல்லாமல் என் வீட்டிலேயே இருந்து இத்தனை நாள் தின்று கொழுத்த கடாவாகிய செல்லப்பாவல்லவாடா நீ? உன்னைப் பற்றிய கடிதம் எனக்கு வரும்போதே உன் யோக்கியதையை நானறிந்துகொண்டேன். என் கண்மணியாகிய அருமைப் புதல்வியின் ஆசையைக் கெடுக்கலாகாதென்றும் கடிதத்தையே உண்மையாக நம்பலாகாதென்றும் நான் சும்மாவிருந்தேன். நேற்று உன் பவிஷைப் பத்திரிகையில் பார்த்தபிறகே குழந்தையின் மனமும் மாறுதலடைந்தது. அதுவும் போதாதென்று அந்தச் சேதியை ஊர்ஜிதப் படுத்துவதற்காக நீ இங்கு வந்து இந்தப் பெண்மணியைக் கற்பழித்துவிட்டு அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகலாமென்று எண்ணங் கொண்டு வந்தாயோ? சீச்சீ. வெட்கங்கெட்ட மடையா! உன் பவிஷை எடுத்துக்கொண்டு வெளியிலும் கிளம்புகின்றாயே! ஐயோ! என்புதல்வி நாடகத்துக்குப் போகாமல் வீட்டிலிருந்தால் அவள் மனம்

182835

முற்றும் நம்பும்படியாக இந்தக் காட்சியைச் நேரில் காணும்படி செய்வேனே. அவள் வீட்டிலில்லையே'' என்று சண்டபடியெல்லாம் திட்டிக்கொண்டே சந்திராவை நோக்கி "என் கண்மணி சந்திரா! இந்தப் பாவி என்ன செய்தான்? எல்லாவற்றையும் பயமின்றிக்கூறு'' என்றான்.

இதைக்கேட்ட அந்தச் சாகஸக்கள்ளி நீலித்தனமாக அழுது கொண்டே, ''ஆ! நான் என்னவென்று கூறுவேன். நாதா! தாங்கள் இன்று எங்கேயோ வெளியில் போகப்போவதாகவும் இங்கு வரவில்லை என்றும் தெரிவித்ததாக வேலைக்காரன் கூறினான். நாங்களிருவரும் போஜனம் செய்தோம். பின்னர் எனக்குத் தூக்கம் பிடிக்காமையால் சற்றுப் பாடலாமென்று உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தேன். மழை வந்துவிட்டது. என் தாயார் ஏதோ குப்பையை வீதியில் போடுவதற்குக் கதவைத் திறந்துகொண்டு சென்றார்களாம். அப்போது இந்தப் பாவி மழை பெய்கிறதென்றுவீதியில்நின்றிருப்பதாகக் கூறினனும். என் தாயார் உள்ளே வரும் சமயம் இவனும் விடாமல் கூடவே வலுவில் உள்ளே வந்து கதவைத் தாளிட்டுவிட்டு, என் கையிலிருந்த தம்புராவை வலுவில் எடுத்து வைத்துவிட்டு என்னை அக்ரமமாக அராக்ருதம் செய்ய முன்வந்தான். நான் உடனே வீதிப்பக்கமாவது ஓடித் தப்பித்துக் கொள்ளலாமென்று எண்ணி இந்தப் பக்கம் வந்தேன். இந்தப் பாவி என்னையும் என் தாயையும் போகவிடாமல் வழிமடக்கி என்னைக் கட்டியணைய வந்தான். நான் தாங்கமாட்டாத துயரத்தால் கத்திவிட்டேன்; என் தாயும் திமிறிக்கொண்டு வீதிக்கதவைத் திறக்கச்சென்று திறந்தாள். நீங்களும் வந்தீர்கள்'' என்று மாயஜாலம் செய்துகொண்டே கூறி முதலியாரைத் தழுவிக்கொண்டாள்.

இந்த அநியாயமான சம்பவத்தையும் வார்த்தைகளையும் கேட்ட செல்லப்பா தன்னையே மறந்து "இதென்ன கஷ்டகாலமாக விருக்கின்றதே. நாம் கனவிலும் எண்ணாத ஆபத்தெல்லாம் நம் தலைக்கு இவ்விதம் வரவேண்டுமா? இதென்ன கொடுமை! எல்லாம் போதாதென்று இந்த முதலியாருமா இங்கு வரவேண்டும்? ஐயோ! அநியாயக் கொள்ளையே! இந்த நீலி படுபாவி என்னை மோசம் செய்தனளே! ஐயோ! அக்ரம காலமே! இப்படியும் அநியாயம் நடக்குமா! ஏற்கெனவே என்மீது நல்ல எண்ணமில்லாத இவருக்கு இந்தப் படாப் பழியையும் நேரில் காணும்படி சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டதே!

வரவேண்டுமோ? ஐயோ! நான் உண்மையில் நிரபராதியாக விருந்தாலும் என்பேரில் வீணாக வந்துள்ள குற்றத்தை முற்றும் நம்பியிருக்கும் இவருக்கு இதையும் நேரில் பார்த்தபிறகு இன்னும் அது ஊர்ஜிதப் பட்டு விட்டதாகையினால்இச்சமயம்நான்உண்மையைக் கூறினால் அது நம்பத் தக்கதாகுமா? வீணே நான் கத்துவதுதான் மிச்சமாகும். ஐயோ! இந்த முதலியார் தம்முடையவைப்பாட்டியாகிய தாசியின் பேச்சையேசிரசாக வகித்து அதற்குத் தகுந்தாற்போல் பேசுகின்றாரேயன்றி எது உண்மை என்பதைவிசாரிக்கமுன்வரவில்லையே. அப்படியிருப்பினும் நாம் பேசாதிருப்பது பிசகு. உண்மையை நாம் கூறாதிருப்பது கூடாது. அதைக் கேட்டாலும் சரி கேளாவிட்டாலும் சரி'' என்று தீர்மானித்துக் கொண்டு வெகு மரியாதையாகவே பேசத் தொடங்கி, ''மாமா! என் மீது தாங்கள் வீணே பேதமான எண்ணம் எண்ணியிருப்பது பிசகு. என்மீது வந்துள்ள பழியெல்லாம் அபாண்டமானவைகளேயன்றி உண்மையேயல்ல. அவற்றையெல்லாம் தாங்கள் நம்பலாமா?'' என்று நீலாமணி வீட்டில் நடந்த உண்மையான விஷயத்தையும் கூறினான். இதைக்கேட்ட முதலியார் ஆக்ரோஷத்துடன் பேசத் தொடங்கி, ''அடே! பாவி கிராதகா! உன்னுடைய திருட்டை ஒளிப்பதற்கு நீ கட்டியிருக்கின்ற கட்டுக்கதை இங்கு யாருக்கு வேண்டும்? உன்னிடமே வைத்துக்கொள்ளலாம். நீ வலுவில் வந்து இந்தப் பெண்மணியை அக்ரமம் செய்ய யத்தனித்ததுமல்லாமல் அந்தப் பழி உன்னை விட்டு நீங்கும்பொருட்டு அதனை இந்தப் பெண்மீதிலேயே வைக்கத் துணிந்த பாவியாகிய நீ எதைத்தான் செய்யமாட்டாய்! சீச்சீ வெளியே நட, நாயே! நான் உன்னை இப்போது போலீஸ் சார்ஜ் செய்யவும் நியாயமிருக்கின்றது. உன்மேல் மானநஷ்ட வழக்குத் தொடுப்பதற்குத் தாராளமாக இடமிருக்கின்றது. அதற்கும் ஒரு காரணத்தை உத்தேசித்தே உன்னை இந்தத் தரம் சும்மா விடுகிறேன். சீ வெளியில் ஓடு! திருட்டு முண்டமே'' என்று கூறியவாறு செல்லப்பாவின் கழுத்தில் கையைக் கொடுத்துத் தரதரவென்று கெட்டிக்கொண்டு வந்து வீதியில் தள்ளிக் கதவைத்தாளிட்டுக்கொண்டுஉள்ளே சென்றுவிட்டார். ஆஹா! வெளியில் தள்ளப்பட்ட செல்லப்பாவின் மனம் எவ்வாறிருக்குமென்பதை நாம் கூறாமல் யூகித்தறிந்து கொள்வதே நலம்; அந்தோ! அவன் தாமரையிலையின் நீர்த்துளிபோல் தத்தளிக்கின்றான்! அவன் அங்கமுற்றும்

நரம்புக்கு நரம்பு பதறுகின்றது. தேகம் துடிதுடிக்கின்றது. "ஒன்றன் பின் ஒன்றாய் இவ்விதமான ஆபத்தும் அவமானமுமா எனக்கு வர வேண்டும்? ஐயோ! என்னைப்பெற்ற பாதகர்களின் முதல் சூழ்ச்சியா லன்றோ இத்தனையும் நேர்ந்தது. அவர்கள் டீ பார்டி என்று முகாந் தரம் வைத்துக்கொண்டு என்னைத் தனி விடுதியில் வரவழைத்து அங்கு அகப்பட்டுக்கொள்ளும்படிச் செய்து பிறகு வீட்டிற்கு அழைத் துக்கொண்டு போகலாம் என்று எண்ணிச் செய்த சதியால் ஒவ்வொரு துன்பமும் விளைந்து கொண்டே வருகின்றதே. ஆஹா! காந்தாமணி யின்மீது நான் கொண்டிருந்த மோகமன்றோ என்னை இந்த நிசி வேளையில் இந்த அடையாற்றிற்கு வரும்படியாக இழுத்து இந்த வினைக்குள்ளாகும்படி செய்துவிட்டது. ஐயோ! தலைவிதியே. இப் படிப்பட்ட கஷ்டங்கள் வரும் என்று நான் கனவிலும் கருதவில்லையே! எல்லாவற்றையும் விட இந்தத் தாசிப்பெண்ணின் சாகசத்தை எண்ண எண்ண என்நெஞ்சம்பதறுகின்றதே. ஐயோ! தாசிகள்நீலித்தனம் செய் வார்கள் என்ற பதத்தை நான்பிறர் சொல்லக்கேட்டிருக்கிறேன். இன்று அதை நேரில் கண்டும் விட்டேன். ஆஹா! என்ன சாகசம்! என்ன சாகசம்! சிச்சீ. கேவலம் உலகம் இவ்விதமா கெட்டுவிட வேண்டும். ஐயோ! ஏற்கனவே காந்தாமணி என்மேல் வெறுப்பு கொண்டிருப்ப தற்கு அனுகுணமாய் இந்த எதிர்பாராத அநியாய சம்பவத்தைக் கண் ணுற்ற முதலியார் இதை என் கண்மணிக்கு எடுத்துரைக்காம லிருப் பாரா? அவள் இதைக் கேட்டபின் என்னைப்பற்றி என்ன தான் நினைக்க மாட்டாள்! ஐயோ! நான் இன்னும் கொஞ்ச நஞ்சம் வைத்துக்கொண் டிருந்த ஆசையும் போய்விட்டதே. அகப்பட்ட வரையில் லாபமென்று எண்ணி என் வைரமோதிரத்தையும் அபகரித்துக்கொண்டு என்னை யும் வீணை பழிக்குட்படுத்தி அவமானத்தையும் விளைவித்துவிட்ட அந்த சாகசக்கள்ளியின் நெஞ்சின் உரம் யாருக்குத்தான் வரும்? அந்த மோதிரத்தைத் தரும்படி கேட்டால் என்னையே இன்னும் நகைகளைத் திருடியதாகக் குற்றம்சாட்டி அதற்கு வேறு சாகசம் செய்யத் துணிந்து விடுவாள். இத்தகைய ராக்ஷஸி கையினின்றும் நாம் தப்பியதே நல்லதா யிற்று" என்று பலவிதமான கலவரத்தில்மிதப்பவனுய்வீதியில் நடக்க லானுன். அப்போதும் சிறிது தூறலிருந்தது. அவன் அந்தமழையைலக்ஷி யம் செய்யாமல் மீண்டும் நடந்துகொண்டே சென்று மெல்ல தட்டித்

திணறியடித்துக்கொண்டு கலங்கிய மனத்தோடும் நனைந்த உடையோடும் ரத்னசாமியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

செல்லப்பாவின் மனதில் விவரிக்கவியலாத கலக்கமும் ஒருவிதமான ஆத்திரமும் அவமானமும்பொங்கிவழிய அவன் உள்ளே சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் தன்னுடைய ஈர உடைகளை மாற்றி விட்டு எந்த உடையை அணிவது? அவனுடைய துணிமணி முதலிய எல்லாம் காந்தாமணியினுடைய வீட்டிலல்லவா இருக்கின்றன? இப்போது நல்லநிசிவேளையில் அவன் தன் உடைக்கு என்னசெய்வான்? அவன் உடை ஈரமாயிருப்பதால் குளிர் நடுக்குகின்றது. என்ன செய்வான்! பலபடி மனதைச் செலுத்தியவண்ணம் பித்தனைப்போலிருந்தான். அச்சமயம் ரத்தினசாமி அவ்விடத்தில் தோன்றினன். செல்லப்பா அப்போது நித்திரை செய்யாமல் உட்கார்ந்திருப்பதையும் அவனது உடை ஈரமாகவிருப்பதையும் கண்டு, "என்ன செல்லப்பா! உன்னுடைகள் ஏன் நனைந்திருக்கின்றன? மழையில் நீ எங்கே சென்றாய்?" என்று கேட்டான்.

செல்லப்பாவின் மனக்குழப்பமும், அவன் இத்துணை போது அலைந்து நடந்துவந்ததும், அவனுக்கு ஏற்பட்ட அவமானங்கள் எல்லாவற்றையும்விடச் சற்றுமுன் ஒருதாசிப்பெண்ணல் அவனுக்குநேர்ந்த பெரும் அவமானமும் அவன்தன் போதிரத்தைத் தோற்ற நஷ்டமும் ஒருங்குகூடி அவனைக்கேவலம்ஹீனஸ்திதிக்குக்கொண்டுவந்துவிட்டன. ஆகையினல் அவன் மெதுவாய்த் தாழ்ந்த குரலுடன், ரத்னசாமியிடம் நடந்தவைகளையெல்லாம் தெரிவித்தான். இதுகேட்ட ரத்தினசாமி வியப்பும் மனக்கலக்கமுமடைந்து "ஆ! இப்படியும் நடக்குமோ!என்ன அனியாயமப்பா இது!உனக்கு ஏதோ போதாதகாலம்போலும்!இப்படி எல்லாம் நடக்கின்றது. நீ முன்னல் உன் நனைந்த உடையை மாற்றி விட்டு வேறு அணிந்துகொள்ளப்பா. அதோ கொடியில் என்னுடைய உடை சலவை செய்தவாறு இருக்கின்றது. அதனை எடுத்து அணிந்து கொள்" என்று கூறியவாறு தானே அத்துணிகளை எடுத்துச் செல்லப்பாவிடம் கொடுத்தான். செல்லப்பா அதை அணிந்துகொண்டு ரத்னசாமியை நோக்கி "மணி இன்னுமாகவில்லையே! இதற்குள் ஆட்டம் முடிந்து விட்டதோ?" என்றான்.

ரத்னசாமி:—இன்னும் முடியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரு வேடிக்கையே நடக்கின்றது. அந்தக் கொட்டகையில் பெரிய குழப்பம் ஏற்பட்டு அமர்க்களமாய்விட்டது. அடிதடி சண்டையாய் அகோரக் காட்சிகள் நடந்துவிட்டன. நான் மெல்ல வழி செய்துகொண்டு வருவதற்குள்ளே பிராண சங்கடமாய்விட்டது. சாரங்கதரன் பார்ட்டு போட்டுக்கொண்டிருந்தவன் சித்திராங்கியினிடம் புறாவைக் கேட்கச் சென்ற சமயம் சித்திராங்கி தன்னை அணையுமாறு கூறியபோது சாரங்கதரன் உடனே சித்திராங்கி பார்ட்டு போட்டிருந்தவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டு விகாரம் செய்துவிட்டான். இவன் கட்டித் தழுவிய வேகத்தில் சித்திராங்கிபார்ட் போட்டவன் எதிர்பாராமல் உண்டாகிய செய்கையால் மூச்சுத் திணறி மூர்ச்சையாய்விட்டான். அதோடு அவன் தலையில் கட்டியிருந்த டோப்பாவும் அணிந்திருந்த ஆபரணங்களும் சிதறி விழுந்துவிட்டன. இந்த அகோரமான சம்பவத்தைக் கண்ட ஜனங்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் கூக்குரலிட்டுக் குழப்பத்தை யுண்டாக்கிவிட்டார்கள். உடனே ஸ்டேஜ் மானேஜர் வெகு ஆத்திரத்தோடு உள்ளே சென்று விசாரிக்கச் சென்றார். பெருத்த கலக்கமாய்விட்டது. இனிமேல் குழப்பமடங்கி மீண்டும் நாடகம் நடக்குமோ நடக்காதோ என்ற கலக்கத்தினால் நான் வழி செய்துகொண்டு வந்துவிட்டேன். இப்போது ஒருமணி யிருக்கலாம். நீ சற்றுப் படுத்து நித்திரை செய்யப்பா! நானும் படுத்துக்கொள்கிறேன்'' என்றான். இதைக்கேட்ட செல்லப்பா வியந்துபோய் "நீ சொல்வது வெகு ஆச்சரியமாக இருக்கின்றதே. சாரங்கதரன் வேஷம் போட்டவன் புத்தியில்லாமல் எப்படி கதைக்கு நேர்விரோதமான காரியத்தைச் செய்தான். அவன் யோக்கியமானவன் தானே?'' என்றான்.

ரத்னசாமி:—அவன் யோக்கியமானவனாக விருந்தாலும் வேலை என்னவோ விகாரமாய்விட்டது. உம்! அவற்றை யெல்லாம் பற்றி நமக்கு என்ன யோசனை? நீ தூங்கு—என்று கூறியவாறு தன்னுடைய உடைகளை மாற்றிக்கொண்டு படுத்தான். பிறகு செல்லப்பாவும் ஒரு கட்டிலில் படுத்துவிட்டான். செல்லப்பாவின் மனக்குழப்பத்தில் சற்றேனும் நித்திரையே கொள்ளவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கிக்கொண்டே யிருந்தான். எவ்விதமாயினும் காந்தாமணியை நேரில் கண்டு தான் நிரபராதியென்பதைக் கூறி

அவள் காலில் விழுந்தேனும் தன்னை வெறுக்காமலிருக்ும்படி வேண்டி அவளிடம்தான் தனதுள்ளார்ந்த அந்தரங்கப் பிரியத்தோடு உண்மைக் காதல்கொண்டிருப்பதை வெளியிட்டு அவளிடமிருந்து அதன் பலனைப் பெறுதல்வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு அவளை எங்கு எந்தவிடத்தில் காணலாம் என்று யோசனை செய்யலானன். "அவள் வீட்டிற்குப் போவதென்றாலும் எனக்குச் சரிப்படவில்லை. அவளை எவ்விதம்பார்ப்பது?...........சரி! அவள் தினம் மாலையில் பீச்சுக்கு வருவது வழக்கமல்லவா? அங்கு சென்று அவளைக்காண்போம்" என்று பழையபடி தீர்மானித்துக்கொண்டான்; "அவளுடன் வேறு யாரேனும் வந்தால் என்ன செய்வது? உம். எல்லாவற்றையும் அங்கு சென்று பார்ப்போம்" என்று முடிவு செய்துகொண்டு உதயமாகும் நேரத்தை நோக்கிக்கொண்டிருந்தான்.

உதயமும் ஆய் அன்று பகற்பொழுதும் கழிந்தது. மாலை நான்கு மணியாயிற்று. செல்லப்பா அவ்விடத்தைவிட்டுக் கிளம்பி நேரே கடற்கரைக்குச் சென்று காந்தாமணி வழக்கமாக வரும் இடத்தில் உட்கார்ந்து அவள் வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்திருந்தான். அப்போது அவன் உட்கார்ந்திருந்த விடத்தில் அவன் காலுக்கு நேரே உள்ளே கல்லை வைத்துச் சுற்றிய ஒரு கடிதம்வந்து சட்டென விழுந்தது. இதைக்கண்ட செல்லப்பா இதை யார் எறிந்திருப்பார்கள் என்று கையில் அதை எடுத்துச் சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் யாரும் காணப்படவில்லை. இது யாதாயிருக்கக்கூடும் என்று அதைப் பிரித்தான். அதில்:—

"ஐயோ! நீ காந்தாமணியைக் காண்பதற்காக அவள் வரவை எதிர்பார்த்திருக்கின்றாய் என்பதை நானறிவேன். நீ அறியாமையால் அப்படி உட்கார்ந்திருப்பதாக விருந்தால் உடனே எழுந்துபோய்விடு. அதனால் பின்னால் உனக்கு என்ன நேரும் என்பதை இப்போது நீ யறியாய். ஜாக்கிரதை! அந்த ஆசையை விட்டுப்போய்விடு."

என்று எழுதியிருந்ததைப் படித்தவுடன் அவன் பெரும் மனக்கலக்கமடைந்தான். "இது என்ன மாயமாக விருக்கின்றதே. காந்தாமணியைப் பார்க்கவந்தது என்பது ரத்னசாமிக்குக்கூட தெரியாதே. அப்படியிருக்க இப்போது இதையாரறிந்து இவ்விதம் பயமுறுத்திக் கடிதம் எழுதியிருப்பது. அருகில் உடனே பார்த்தும் ஆளைக் காண

வில்லையே. இதை என்னென்று நினைப்பது? காந்தாவைப் பார்க்க வேண்டாம் என்கிற கருத்தோடு என்னுடைய சத்ருக்களே இந்தக் கடிதமெழுதி யார் மூலமாகவேனும்இங்கே என்முன் விட்டெறியும்படி செய்திருப்பார்களோ? உம்-அப்படித்தா னிருக்கவேண்டும். இதற்கெல்லாம் நான் அசைபவனேயல்ல. எனக்கு இவ்விரண்டுநாளாக வந்துள்ள இடரைவிட இனிவரப்போவது ஒருபெரியதல்ல. ஆகட்டும். வருவது வந்தே தீரும். நான் என் கண்மணியான, காந்தாமணியைக் கண்ணாரக் கண்டு பேசாமல் போவதில்லை'' என்று தீர்மானித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். மணி ஆறாய்விட்டது. காந்தாமணியைக் காணவில்லை. செல்லப்பாவின் மனது துடிதுடித்துப் பறக்கின்றது. இத்தனை நேரம் அவள்வந்து விடுவாளே என்று வழியைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றான். அவன்காந்தாமணியின்மீது கொண்டிருக்கும்மெய்க்காதலும் அந்தரங்க நேசமும் அவனைவதைத்துஉருக்குகின்றன. அவன் "ஆஹா! என் கண்ணே காந்தா! உன்மீது நான் கொண்டிருக்கும் உண்மையான காதலுக்கு ஈடாக எதைத்தான் சொல்லமுடியும்? உன் மதிமுகத்தை ஒரு விநாடி காணாவிடில் என்னுயிர் தத்தளிக்குமே! அத்தகைய முகத்தை நன்றாக நோக்கி எத்தனை நாளாயிற்று! உன் திருமுகத்தைக் காணாமல் உருகிக்கொண்டிருக்கும் என்னைக் களிக்கச்செய்யும் காலம் எப்போது வருமோ?'' என்று எண்ணியவாறு உட்கார்ந்திருக்கையில் சற்று தூரத்தில் ஓராரணங்கு நடந்து வருவதைக் கண்டான். அப்போது சற்று இருளும் சூழ்ந்து கொண்டது. அவன் அங்கு வரும் பெண்மணியைக் கவனித்தான். அவள் தான் காந்தாமணி என்பதை உணர்ந்து கொண்டான். அவளைக் கண்டதுமே அவனுடைய தேக முற்றும் இன்ப ஊற்றுப் பெருகியது. அவன் ஆநந்தத்துடன் சற்று தூர விலகி நின்றுகொண்டே அந்த மடந்தையின் அழகைக்கண்டு ஆநந்த சித்தனாகவே நின்றிருந்தான்.

ஆகாயக்கலர் பட்டுப் புடவையும், ரோஜாக்கலர் ஜாக்கெட்டும் அணிந்துகொண்டு தலையை அழகாய்வாரி பிச்சடைபோட்டு அதில் கனகாம்பரம், ரோஜா முதலியபுஷ்பங்களை வளைவாகச்சூட்டிக்கொண்டு சாதாரணமான அணிகளுடன் மெல்லியலாள் காலில் வில்வெட் ஸ்லிப்பர் போட்டுக்கொண்டு சங்கிலியொன்றில் ஓர் அழகிய குச்சுநாயைக் கட்டி அந்தச் சங்கிலியைக் கையில் பிடித்துக்கொண்டு வெகு உல்லாச

மாயும் கம்பீரமாயும் மணலில் நடந்து வந்து அலைமோதுமிடத்திற்குப் போய் நின்றாள்.

செல்லப்பா காந்தாமணி ஜலத்தினருகில் சென்று நின்றபின்னர் மெல்ல நடந்து அவ்விடத்திற்குச் சென்றான். காந்தாமணி நாயோடு விளையாடிக் கொண்டிருப்பதைக்கண்டு மகிழ்ந்தவனாய் அங்கு வேறு யாருமில்லாமையைக்கண்டு காந்தாமணியின் பின்புறமாய்ச் சென்று மிக இறைஞ்சிய குரலால் "என் கண்மணி காந்தாமணி! பாவியேன் உன்னுடைய தாமரையைப்போன்ற வதனத்தின் எழிலைக்கண்டு களிப்புற ஆர்வமுடன் காத்துக்கொண்டிருக்கிறேன். எனது இன்பக்களஞ்சியமே! என்மீது உண்டாயிருக்கும் அபாண்டமான குற்றத்தைச் சிறிதும் நான் அறியவேமாட்டேன். அவை அனைத்தும் யாரோ வேண்டுமென்று செய்த சதியாலோசனையேயன்றி வேறல்ல என்பதை சத்தியமாக நான் கூறுவேன். என்தெவிட்டாததெள்ளமுதமே! உன்னிடம் அதனைத்தெரிவிக்கவே நான் இங்கு உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன். என் கண்ணே! நீ என்னிடம் வைத்துள்ள ஆசைக்கும் மதிப்பிற்கும் ஒருகரை என்பது இல்லாமலிருந்ததே. அத்தகைய உன் கரத்தினால் எனக்கு நீ எழுதியனுப்பிய கடிதத்தைக் கண்ணுற்றதும் என்னையறியாத வியப்பும் திகைப்பும் உண்டாய்விட்டன. கண்மணி! என் மனத்தைக்கவர்ந்த மாமணி! உண்மையில் நீ அந்தக் கடிதத்தை உன் முழுமனத்துடன் எழுதினாயா? அது உன் அருமையான கரத்தினால் எழுதப்பட்ட கடிதம்தானா? ஆருயிர்க்கிள்ளையே! எனது அபரஞ்சிதத் தங்கமே! நீ அவ்வாறு மனப்பூர்வமாய் எழுதுவதற்கு அப்போது இந்த அபாண்டத்தைத் திடீரென்று நீ கேட்டதே காரணமாகுமென்று நான் நம்புகிறேன். என்றாலும் உன் மனத்தில் நீ வைத்திருந்த அன்பு அவ்வளவு சடுதியில் அதைக்கேட்ட மாத்திரத்தில் உடைந்துபோயிருக்குமா என்று நான் இன்னமும் ஐயுறுகின்றேன். நீ அப்போதைய நிலைமையில் அவ்வாறு வரைந்திருந்தாலும் என்னுடைய உண்மையை நீ யறிந்த பின்னர் நீ பழைய மாதிரியாகவே இருப்பாயென்று நம்புகிறேன். என் காதற்கனியே! உன்னை நான் சாமான்யமாய் மிருகத்தன்மையாகக் காதலிக்கவில்லை என்பதை நீ யறியமாட்டாயா? நான் உன்மேல் எத்தகைய காதல்கொண்டிருக்கிறேன் என்பதை நான் கூறவேண்டுமோ? என் ஆசைக்கண்மணி! எனதன்பின்

நவமணி! உனது செங்கனிவாயின் செந்தேன்போன்ற மொழிக்கே யான் காத்திருக்கின்றேன். என்னை வெறுக்காதே. அந்த அபாண்டத்தை உண்மை என்று நினைக்காதே. நான் சொல்வது முக்காலும் சத்தியம். நீ நல்ல புத்திசாலியாகையால் உனக்கு நான் அதிகமாக யாதும் கூறவேண்டாம். என் வார்த்தையை நம்புவாய். கண்ணே! காந்தா! என்னுடைய உயிரை மீட்பாய்! கிளியே!" என்று செல்லப்பா கண்ணீர் பெருக மனமிளகியவண்ணம் கூறியதையெல்லாம் காந்தாமணி திரும்பி அவன் முகத்தை நேராக நோக்காமல் நின்றபடியே கேட்டுக்கொண்டிருந்தாள். அவன்கூறி முடித்ததும் காந்தாமணி கொல்லென்று நகைபுரிந்தாள்.

தான் கூறியதை யெல்லாம் சற்றும் செவியில் வாங்காமலும் தன்னைத் திரும்பிப் பாராமலும் பெரியதாகவும் ஏளனமாகவும் காந்தாமணி நகைத்ததைக்கண்டதும் செல்லப்பாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எதற்காகக் காந்தாமணி அவ்வாறு நகைத்தாள் என்பதையறியக்கூடாமல் இமைப்பொழுது தயங்கினான் என்றாலும் அவனுடைய மனத்தில் குடிகொண்டிருந்த அன்பானது அவனைப் பின்னும் இழுத்துப்பேசச் செய்ததனால் அவன் மீண்டும் பேசத்தொடங்கி முன்னினுமதிகமான இரக்கத்துடன் "என் கண்ணின் கருமணியே! என் மனத்திற்கு ஓர் உறுதியளிக்கமாட்டாயா? என் கட்டிக்கரும்பே! என் தங்கக்கிளியே! நான் கூறுவதுனக்குப்பரிகாசமாகவிருக்கின்றதா? நீ பரிகசித்து அலக்ஷியமாக என்னை மதித்து உன் காலால் உதைத்துத் தள்ளினாலும் உன்மேல் நான் கொண்டிருக்கும் காதலை இந்த ஜென்மத்தில் மறக்கவே முடியாது. என் கற்பகமே! நீ உன் வாய் திறந்து ஒரு மொழி செப்பாயா?

சேயரிக்கண் மானே! சிறியேன் மனத்திருந்து
பேயனைப்போற் செய்யப் பிழை என்சொல்—வேயனைய
மென்றோள் தழுவ விரைவேனுக் குன்கிருபை
குன்று தருள்வாய் குறித்து.

மாணிக்கமே! மரகதமே! ஏன் உன் வாய்திறந்து ஒரு மொழியுரைக்கலாகாதா? கண்ணீர் வழிய நான் கூறுவது உன் கண்ணுக்குப் புலப்படவில்லையா? என் இன்னமுதச் சுவையே! உனது நாய் செய்த பாக்கியம் யான் செய்யவில்லையா? உன்னழகிய காத்தைத் தீண்ட

லாகுமா? என் மனமும் தேகமும் பறக்கின்றனவே!" என்று கூறியவாறு அவள் கரத்தை மெல்லப் பற்ற முயன்றான்.

இதுகண்ட காந்தாமணி பின்னிட்டுச் சற்று விலகி நின்று தன் கரத்திலிருக்கும் நாயைப் பார்த்து முறுவல் பூத்தபடியே "ஓ! மை டியர் ரோஸ்! நீ என்ன உன் உடம்பையறியாமல் விளையாடிக்களிக்கின்றாய்? யாரை என்ன மோசஞ் செய்து திருடலாம் என்று பார்க்கிறாயா? இந்தக் கடற்கரையில் உனக்கு எந்தத் தாசிவீடும் கிடைக்காதே!" என்று கூறியவாறு அதை எடுத்து முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு முத்தமிட்டுப் பின் விடுத்துப் பெரியதாக நகைத்தாள்.

ஆஹா! அதைக்கேட்ட செல்லப்பாவின் மனம் எவ்வாறிருக்கும் என்பதைக் கூறவேண்டுமோ? அந்தோ! அவன் காதில் அப்போதே நாராசத்தைக் காய்ச்சிக் கொட்டுவது போலான பாதை ஏற்பட்டு அவமானத்தினால் மிகவும் குன்றிப்போய்த் தத்தளிக்கலானான். அவனுக்கு அவமானம் ஒருபுறம் பாதித்தாலும் கூட தன்னை ஈன்றோர் மீது தோன்றியுள்ள பகைமை இன்னு மதிகரித்ததே யன்றி அது குறைந்தபாடில்லை. அவன் மனக்கலக்கம் அதிகரிக்க அதிகரிக்கஅவனது ஆத்திரமும் பதின்மடங்கதிகமாகவே வளர்ந்தது. ஐயோ! காந்தாமணி தன்னை உண்மையாகவே திருடனென்று நம்பிவிட்டதை எண்ண, அவனுக்கு அவளது சந்தேகத்தை எவ்வாறு நீக்கி உண்மையை அறிவிப்பது என்பது தோன்றவில்லை. "நான் எவ்வித குற்றமும் செய்தவனன்று என்பதை எத்தனைதரம் முறையிட்டாலும் இவள் மனத்தில் முன்னால் விழுந்துள்ள அபிப்பிராயம் மாறுதலடையவில்லையே! என்ன செய்வேன்? சீவகன் தனது மனைவிகளில் ஒருத்திபின் கோபத்தைத் தணிப்பதற்காகத்தான் அவள் காலில் விழுந்ததுபோல் நாமும் இவள் காலில் விழுந்து நாம் நிரபராதி என்பதை இவள் மனதில் படும்படியாக வேண்டிக் கொள்ளலாமா!" என்று எண்ணுகிறான். அவன் கண்ணில் நீர் அருவிபோல வடிகின்றது. நாத்தடுமாறக் குரல் நடுங்க மீண்டும் பேசத்தொடங்கி! "ஆ என் ரத்தினமே! நான் கூறுவதை நீ இன்னும் செவியிற் கொள்ளவில்லையா? நான் உண்மையில் ஒரு குற்றமும் செய்யாத நிரபராதி என்பதைச் சத்தியமாகக் கூறுகிறேன். அந்தோ!

என் மனோரஞ்சனியே! என் கண்ணான கண்மணியே! என்னை உன் மனமார எவ்விதம் காதலித்தாயோ அதேபோல் இப்போது உன் மனத்தினாலேயே என்னை வெறுத்துக் கேவலம் ஒரு நாய்க்கும் கடையனாக எண்ணி என்னை நீ ஈனம் செய்யலாகுமா? என் கிளியே! உன் வாயினால் நீ என்னை நேசித்த அன்றே விவாகமானது போலத்தான் என்று கூறிய மொழி இன்னும் என் காதில் கணீர் என்று ஒலிக்கின்றதே. அதே வாயினால் நீ இவ்விதம் என்னைக் குற்றவாளியென்று கூறுவதும் ஒருகாலத்தின் கொடுமையோ! என் கண்ணினுள்மணியே! மின்னிடைமானே! உன்னையான் நேசித்ததையும் நீ என்னை நேசித்ததையும் நம்முடைய மனமறியுமே யன்றிப்பிறரறிவார்களோ? என் செல்வச்சீமாட்டியே! நீ இப்போது என்னை இகழ்ந்து வெறுப்பதை மாத்திரம் பிறரறிவார்களே யன்றி நம்முடைய நேசத்தை யாரேயறிவார்கள்? கண்ணே! வேண்டாம், வேண்டாம். உன்னை நான் வேண்டிக்கொள்கிறேன். என்னுயிரைப் பறக்கவிடாதே கண்ணே! முதல் நாள் உன்னைக்கண்டு காதல்கொண்டு உன்னில்லம் வந்து பிறகு நான் என் வீடுசென்ற காலத்தில் என்னருமை பத்மவல்லி எனக்குப்பெரியதோர் பிரசங்கம் செய்ய நான் கடவுளை இகழ்ந்து அவரவர் ஆத்மாதான் கடவுள் என்று கூறியதற்கு அவள் எனக்கு எத்தனையோ காரணங்களை எல்லாம் கூறியதை எல்லாம் மறுத்த நானே இப்போது உன்னைத் தெய்வமாக உள்ளூர பாவிக்கின்றேன். எனது மனமாகிய ஆலயத்தில் நீ தேவதைபோலப் பதிந்து விட்டாயே. கண்மணி! உன்னைக் கடவுளாக எண்ணி நான் உன்னை ஒரு வரம்வேண்டுகிறேன். அதனை எனக்களிக்க வேண்டும். அதாவது நீ என் மேலுள்ள வெறுப்பை விலக்கி முன்போல் விருப்பம் கொள்ளவேண்டும். நான் நிரபராதி என்பதை நம்புவாய். தங்கமே! என் இன்னுயிர்க் காதலீ! உன் காத்தை நான் தீண்டுவது உனக்கு அசம்மதமாய் விட்டதென்பதை நீ பின்னடைந்து விலகியதிலிருந்து நான் அறிந்துகொண்டேன். உன் சம்மதியைப் பெற்ற பின்னரேயான் தீண்டுகின்றேன். உன் முத்தான வாய்திறந்து உன்னை வெறுக்கவில்லை என்று ஒரு மொழி கூறினால் போதும். மதிமுகமங்காய்! மாசற்றமணியே! நான் இவ்வளவு கூறுவதும் உனது செவிக் கெட்டவில்லையா? உன் மனமிளகவில்லையா? என்னுடைய பரிதாபம் உனக்குத் தெரியவில்லையா?" என்றான்.

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த காந்தாமணி "உலகானுபவம் இத்தகையதென்பதை நான் புத்தகத்தின் மூலமாய்க் கண்டிருந்தேனேயன்றி உண்மையில் இதுகாறும் தெரிந்தவளன்று. இப்போது நன்றாகத் தெரிகின்றது. மோசஞ்செய்யத் துணிந்தவர்களெல்லாம் பகிரங்கமாகப் பேசும்போது இவ்வாறுதான் பேசி ஆளைமயக்கி உள்ளொன்றும் புறம்பொன்றும் வைத்துக்கொண்டு வெகு யோக்கியர்கள் போல் சகவாசம் செய்து எதிரிகளுடைய மனத்தையும் குணத்தையும் இன்னும் மற்ற எல்லாவித நிலைமையையும் ஆழம்பார்த்துக்கொண்டு அவர்களுடைய பிராணனுக்கு எவ்வளவு தூரம் உலைவைக்க லாகுமோ அவ்வளவும் உறவாடிக்கொண்டிருந்து வைத்துவிடுவார்கள் என்று நேற்றுக்கூட ஒரு கதைப்புத்தகத்தில்நான்படித்தேன். முதலில் உன்னையறியாது ஏமாந்தது போதும். அதனால் எனக்கு அவமானம் சம்பவித்ததும் போதும். அன்று நான் எழுதியதுபோல இனிமேல் நமக்கு எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. அன்றோடு அது நீங்கிவிட்டது. ஒரு குற்றத்திற்கு இரு குற்றமாகக் கண்ணெதிரில் செய்த உன்னை இனி நம்புவதும் நடக்குமா? உம். உலகத்தை அறியாத எனக்கு உன்னால் உலகத்தில் இத்தகைய விசித்ரமும் நடக்கின்றது என்பது தெரிந்தது. போதும். என்னை உன்வாயில் வந்தபடி யெல்லாம் கெஞ்சியழைக்க வேண்டாம். உன் வழியோடு நீ செல்லலாம்" என்று கூறியவாறு தனது கைக்குட்டையை வீசியபடியே நாயை நோக்கி, "கமான் கமான் ரோஸ்" என்று அழைத்தாள். அப்போது அவள் கைக்குட்டை கீழே விழுந்துவிட்டது. செல்லப்பா அந்தக் கைக்குட்டையை எடுத்துத்தன் கண்ணில் ஒத்திக்கொண்டு அவள் கூறிய வார்த்தையால்மனந்துடித்தவனாய் "ஹா! ஐயோ! நான் கொண்ட காதலெல்லாம் விழலுக்கிறைத்த நீர் போல் வீணாய் விட்டதே! என் செய்வேன்! அந்தோ! இவ்வுலகத்தில் உன்னைவிட வேறுபொருள் எனக்குக் கிடையாதென்பதை உண்மையாக நான் நம்பியிருக்கிறேன்...... என்னுருயிரே! எனது கண்மணியே! என்னாவி துடிக்கின்றதே! நான் ஒரு குற்றமும் செய்யாமலிருக்க என்மீது வந்துள்ள அபாண்டத்தை நல்ல படித்த விவேகியாகிய நீ நம்பலாகுமா? ஆ! என் ஆசைக்களஞ்சியமே! அன்பின் ஆலயமே! நான் உன்னை என் ஆயுள்கால பரியந்தம் இனி மறக்கவே முடியாது. நான் உன் பொருட்டே உயிர்வாழ எண்ணி

னேன். உன் பொருட்டே உயிரை விட்டுவிடவும் துணிந்துள்ளேன். கண்மணி! என்னருமைக் காந்தாமணி! நீ என்னை உண்மையாகக் காதலித்ததற்கு அடையாளமாகக் கடைசித்தரம் நான் கேட்பதற்குப் பதிலளித்து என்னை என்னுடைய சால வித்யாசத்தினுல் வெறுத்து விலக்கியதுபோதும், நீ என்மேல் கொண்டுள்ள வெறுப்பைமாத்திரம்விலக்கி நான் குற்றவாளியல்ல வென்பதை மாத்திரம் உன் செங்கனி வாயினுல் கூறினுல் போதுமானது. நான் உன்னையே என் குலதெய்வமாக எண்ணியிருக்கிறேன். வீணுக மூண்ட அபாண்டத்தை நீஉண்மை என்று நம்பியிருப்பது என்னுயிரைத்துளைக்கின்றது. அதை மாத்திரம் கருணைகூர்ந்து கூறினுல் போதும். கண்மணி! நான் உண்மையில் நிரபராதி, என்னைக் குற்றவாளி என்று எண்ணுதே. நீ என்னை வெறுத்தாலும் அவ்வெண்ணத்தை நீக்கி விடு. உன்னடையாளமாக இக்கைக்குட்டையையாகிலும் நீ எனக்குக்கொடுக்கலாகாதா! எனதஞ்சுகமே!'' என்று கெஞ்சிக் கேட்டான்.

இதைக் கேட்ட காந்தாமணி ''உம். உன் கண்ணில் ஒத்திய கைக்குட்டையை நீ எனக்குத் திருப்பிக்கொடுத்தாலும் நானதைத் தீண்டவும் அதற்கு யோக்கியதை உண்டா? தூ. ஆ! அதோ எனது சினேகிதைகள் வருகிறுர்கள். நீ என்னேடு நின்று பேசுவதைக்கண்டால் அவர்கள் என்னை என்ன மதிப்பார்கள்! சேச்சே. நான் உடனே இவ்விடத்தை விட்டு அகலவேண்டும். இனி இம்மாதிரி என்னைக் கண்ட விடத்தில் வழிமடக்கிப்பேசவேண்டாம். ரோஸ்! வா நாம்போகலாம்'' என்று கூறியவாறு ஒரேமுறுக்காகச் செல்லப்பாவைப் பாராமல் விசையாய் நடந்து அப்பால் கொஞ்சதூரம் சென்று, தனக்கெதிரேவந்த தன் சிநேகிதர்களை அப்படியே மடக்கித்திருப்பி யழைத்துச் செல்லவெண்ணி சிரித்த முகத்தோடு ''ஓ! மைடியர் ஸிஸ்டர்! கமான், கமான்'' என்று கூறியவாறு அவர்கள் கையைப்பிடித்துக்கொண்டே அவர்களைத் திருப்பி அழைத்துக்கொண்டு சென்றுள். வந்தவர்கள் காந்தா! நாம் சற்றுதூரம் வாக்போவதற்காகத்தான் நீ இங்கு நிற்பதைக்கண்டு இங்கு வந்து உன்னையும் அழைத்துச்செல்லலாம் என்று இவ்விடம் வந்தோம். வா அப்படியே போவோம்,'' என்று கூறி எதிர்ப்பக்கமே நடக்கலானுர்கள். காந்தா மீண்டும் தடுக்கமாட்டாமல் கூடவே நடக்கலானுள். அங்குச்செல்லப்பா கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிய வண்ணம் துடித்த மனத்தோடு மணலின்மீதே சாய்ந்து விட்டான்.

அவ்வழியாக வரும் காரிகையர்கள் செல்லப்பா படுத்திருப்பதைக் கண்டு, ''என்ன காந்தா ! இவனுடனா நீ இத்துணை நேரம் பேசிக் கொண்டிருந்தாய்? இவன் என்ன ஜாமீனில் வெளிவந்திருக்கிறானா! பலே. இவனுடைய திருட்டுப்புத்தியை உணர்ந்து தான் இவனுடைய பெற்றோர் இவனை முதலிலேயே விலக்கிவிட்டார்கள். இதன் உண்மையை யறியாமல் நீ ஏமாந்துவிட்டாயே! என்ன தான் மேனாட்டு நாகரிகப்பரியமுடையவனாகவிருந்தாலு இவ்விதம் த்யாகம் செய்திருப்பார்களா? இவன் இன்னும் எங்கெங்கே திருடிச்சிறைவாசம் சிறப்பாய்ச் செய்துவிட்டு வந்திருக்கிறானோ? இப்போதாவது இவனுடைய யோக்கியதை நமக்குத்தெரிந்ததே. அதே போதுமானது. இது அநியாயக்காரர்களுக்குத் தான் காலம்; அக்ரமமே செய்யும் மனிதர்களைத் தான் சற்றும் சந்தேகிப்பதற்கே இடமில்லாமல் அவ்வளவு சாமார்த்தியமாக அவர்கள் நடந்து கொள்வதனால் நாம் முற்றும் நம்பி மோசம் போய்விடுகிறோம். உற்றாரானாலும் சரி, உறவினராயினும் சரி, அல்லது அன்னியர் சிநேகிதராயினும் சரி யாரையும் உள்ளார்ந்த மதிப்போடு நம்பி ஏமாற்றமடையவே கூடாது. அவ்வாறு நம்பி ஏமாற்றமடையாம லிருப்பவர்கள் நூற்றில் ஒருவர் தான்.........இவனை எதற்குச் சந்தித்துப் பேசுகின்றாய்? இன்னும் உன் மனம் சரிப்படவில்லையா?'' என்றார்கள். இதுகேட்ட காந்தாமணி தான் செல்லப்பாவோடு பேசியதை இவர்கள் கண்டுகொண்டார்கள் என்பதை உணர்ந்துகொண்டாள். இனித்தான் மறைப்பதில் பிரயோஜனமில்லை என்பதை அறிந்த காந்தா பேசத்தொடங்கி ''குற்றம் செய்த எந்த மனிதனும் தான் அதைச்செய்ததாக ஒத்துக்கொள்வானா? தான் எவ்வளவோ யோக்கியனென்றும் தான் நிரபராதி என்றும் தனக்கு வந்துள்ளபழி வீண் அபாண்டமென்றும் தான் சொல்லிக் கொள்வான். அவன் பிறரிடம் அவ்வாறு சொல்லிக்கொண்டாலும் தன்னுடைய மனச்சாக்ஷி என்பது ஒன்றில்லையா? அதற்காகிலும் தான் செய்தது தப்பிதம், செய்வது தப்பிதம் என்பது தெரியாமல் போய்விடுமா? செய்ததெல்லாம் குற்றமாகவிருந்தாலும் குற்றம் செய்தமனிதனும் தான் கடவுளறிய நியாயமே செய்தேன் என்று சொல்லிக் கொள்வதும் உலக வழக்கமாக விருக்கின்றதென்பதை நாம் படிக்கவில்லையா? அதேபோலத்தான் உண்மையில் ஒரு பாபமும் அறிய

வில்லை என்றும் தன்பேரில் வந்துள்ளபழி வீண் அபாண்டம் என்றும், அதை நான் நம்பலாகாதென்றும் கூறுகின்றான். இதைத் தவிர வேறு என்ன விருக்கின்றது. நான் எதற்கும் பதில் சொல்லவில்லை. பேசாமல் நாயுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். நீங்கள் தூர நிற்பதைக்கண்டு உடனே உங்களை நோக்கி நடக்கலானேன்.'' என்று கூறியவாறு சென்று விட்டார்.

காந்தாமணியின் சிநேகிதர்கள் கூறிய மொழிகள் செல்லப்பாவின் காதில் விழுந்தன. அவன் அப்போது உடலைவிட்டு உயிர் நீங்கும் படியான வேதனையையும் அவமானத்தையும் அடைந்தான் அவன் இவ்விடத்திலேயே கடலில் விழுந்து உயிரைத் துறந்து விடலாமா!'' என்று எண்ணினான். தன்னைத் தன் உயிருக்கு உயிராய் மதித்திருந்த காதலி வெறுத்ததும் அவமதித்ததும் போதாமல் அவளுடைய தோழிமார்களும் தன்னை ஏளனமாயும் அலக்ஷியமாயும் கூறியதைக் கேட்ட உடனே அவன் உயிர் துடிதுடித்துப்பறந்தது. அவன் மனமுற்றும் கோபாவேசமாக மாறித் தன்னுடைய பெற்றோரின் மீது சென்று விட்டபடியால், அவன் அவர்களை அதம் செய்துவிடவும் எண்ணினான். பின் ''நாம் இனி எதற்கு உலகத்திலிருக்க வேண்டும்'' என்றும் இன்னும் பலவிதமாகவும் புலம்பியவாறு ஜலத்தினருகில் சென்று தண்ணீரில் நின்றான். அவன் மனத்தில் பொங்கும் துயரமாகிய அலையின்காட்சியையும் அந்தக் கடலில் அப்போது கொந்தளித்துக்கொண்டிருக்கும் அலையின் காட்சியையும் செல்லப்பா பார்த்தவண்ணம் நின்றுகொண்டு ''ஆ, காந்தாமணி, நீ நன்றாகப்படித்துப் பட்டம் பெற்றஅறிவாளியாக விருந்தும் என் விஷயத்தில் உன்மனம் இளகாமற் போனது பற்றி என்னால் தாங்கமுடியாத துயரம் மேல்கொண்டு என்னுயிரைத் துறக்க எண்ணுகிறேன். என்மீது வந்துள்ள பழியை நீ நம்பாமலிருந்தால் போதும் என்று நான் மன்றாடியும் உன்மனம் கரையாமற் போனதும் என்னுடைய கால வித்யாசம்தான். உம் இத்தனை துன்பமும் அவமானமும் ஆபத்தும் அடையும்படியாக என்னைச்செய்தது என் பெற்றோர்களான சண்டாளர்களல்லவா? ஆகட்டும் நான் இந்தப் பழிக்குப்பழி அவர்களை வாங்காமலிருப்பதில்லை'' என்று பலவாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவனுக்குப் பின்புறமாக ''ஹா செல்லப்பா! செல்லப்பா! பொழுது சாய்ந்துவிட்டதே! இன்

னுமா இந்தக் கடற்கரையில் நீ இருக்கின்றாய்? இத்தனை நேரம் இங்கு என்ன செய்தாய்? வா நாம் போகலாம்" என்று கூறியவாறு ரத்னசாமி செல்லப்பாவின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே மணலில் வந்தான். செல்லப்பா அப்போதும் கண்கலங்கிக் கொண்டிருப்பதைக்கண்ட ரத்னசாமி திடுக்கிட்டு "ஆ செல்லப்பா! என்ன இது உன் கண்ணில் நீர் ஆறாய்ப் பெருகுகின்றதே. என்ன விசேஷம்? என்ன நடந்தது?" என்று கேட்டான். இதைக்கேட்ட செல்லப்பா மிகவும் வருந்தியவாறு "ஆ, நண்பா! நான் என்னவென்று கூறுவேன். நான் எண்ணியிருந்ததெல்லாம் வீணாய்விட்டது" என்று தான் காந்தாமணியைக் கண்டதுமுதல் நடந்த வரலாற்றை எல்லாம் கூறினான். இதைக்கேட்ட ரத்னசாமி "ஆ அந்தச் சந்தேகமும் நிவர்த்தியாய்விட்டதா? அடடா! உன்னை எத்தனை விதத்தில் கெடுத்துவிட்டார்கள் உன் பெற்றோர்கள். சீச்சீ இப்படியும் செய்வார்களா? செல்லப்பா நீ எதற்கு இங்கிருந்து கலங்குவது? வீட்டிற்கு வா நாம் இதற்குத் தக்கபடி யோசித்துத் தகுந்த மரியாதை செய்வோம்"என்றுகூறியவாறு அவனை அழைத்துக்கொண்டு, மெல்ல நடந்து தன் வீடுபோய்ச் சேர்ந்தான். செல்லப்பாவுக்கு ஆகாரமே ஏற்றுக்கொள்ளவில்லை. அவன்மனம்நிம்மதியுடையாமல் தவித்தது. தனது பெற்றோரின் மேற்கொண்ட கோபத்தை எவ்விதம் தீர்த்துக்கொள்வது என்ற யோசனையிலேயே அவன் மனம் சென்று குழம்பிக்கொண்டிருந்தது. அன்று இரவு முற்றும் அவன் நித்திரை என்பதே கொள்ளாமல் விழித்தே படுத்திருந்தான்.

அவ்வாறு குழப்பத்திலேயே இரவு கழிய உதயமாயிற்று. செல்லப்பா கலங்கிய மனத்தோடு எதும் காரியத்தில் புத்தி தோன்றாமல் காந்தாமணியின் மீதே மனத்தை வைத்துத் திருப்ப சக்தியற்றவனாய் அவளது கைக்குட்டையை வைத்துக்கொண்டு "ஐயோ! என் கண்ணே காந்தாமணி! உன்னைப் பார்ப்பதுபோல் இனிமேல் உன் கைக்குட்டையைத்தானே நான் பார்க்கவேண்டும். உன் முகாரவிந்தம் இனிமேல் எனக்குக்கிடைக்குமா? உன்முகத்தைக் காணக்கூட பாக்கியம்செய்யாத பாவியாய்விட்டேனே" என்று கூறிக் கண்ணீர் வழிய கைக்குட்டையைக் கண்ணில் ஒத்திக்கொண்டு உட்கார்ந்திருந்த சமயம் அவனுக்குப் பின்புறமாக இரு கானிஸ்டேபில்கள் வந்து செல்லப்பாவின் கையை இறுகப் பிடித்துக்கொண்டார்கள். அதே சமயம் அவர்களோடு வந்த

ஒருவன் "இந்தச் சண்டாளன் தான் கொலை பாதகன்! இந்தப் பாவி தான்! அநியாயமாய் அந்தக் காந்தாமணியைக் கொலை செய்துவிட்டு அதோ அவளுடைய கைக்குட்டையை வைத்துக்கொண்டிருப்பதைப் பாருங்கள்" என்று ஆவேசத்தோடு பதறப்பதற கூறியவாறு அங்கு நின்றான். இரு கானிஸ்டேபில்களும் செல்லப்பாவை "எழுந்திரு ஐயா" என்று அதட்டினார்கள்.

அந்தோ! அச்சமயம் செல்லப்பாவின் மனம் எவ்வாறிருக்கும் என்பதை நாம் கூறவும் வேண்டுமோ? அவன் அப்படியே அசைவற்று விஷயம் இன்னதென்று விளங்காமல் தவித்து விழித்தவாறு நின்று விட்டான்.

182835
600 008


# இனாம்! இனாம்!

## முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

இனாம். இனாம்.




எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

**காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.**

---


ஒரு மாதம்

# பாதிவிலை! பாதிவிலை!

## வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7,




22 காரட் ரோல்டு கோல்டு கைச்செடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இச் செடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு செடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

**ஸ்வான் ஹவுஸ்.**

தபால் நே, 508, பி, டி மதராஸ்.

# லோகோபகாரி.

முப்பத்திமூன்று ஆண்டுகளாய் நிலவும்.

## வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்—பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும், அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தா ரூபாய் நாலு. வெளிநாட்டுக்கு ரூபாய் ஆறு.

மாதிரிப் பிரதி இனம்.

காரியஸ்தர்,

லோகோபகாரி பத்திரிகாலயம்.

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

---

# "கிருஷிகன்."

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள் :—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,

"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

இனம்! ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு இனம்!!

ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதிய

## போலீஸ்கிலி பொதி ராயர்.

சிரிப்பைத்தரும் துப்பறியும் நாவல்.

இதில் கயிற்றைக்கண்டு பாம்பெனப் பயப்படும் போலீஸ்புலி படும் திண்டாட்டம் படிக்கப்படிக்க ஓயாச் சிரிப்பைத்தரும்.

வத்ஸலா கம்பெனி
திருவல்லிக்கேணி, மதராஸ்.

நயம்! வெகு நயம்

உயர்தரமான பம்பாய் கெட்டிச்சாயமுள்ள

## கலர் புடவைகள்.

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்பு ரோஸ், கருப்பு, ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி. அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள்.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

முதல் ரகம் விலை ரூ. 5-8-0; 2-வது ரகம் ரூ. 4-8-0. பூக் கொடிக்கரை செய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0. அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

பிளேன்: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந் துளிர், பச்சை, அரக்கு, கருப்பு, முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்; பெங்களூர் முந்தாணி போட்டது; கலர்கெடாது; மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாது; ரம்மியமான தோற்றமுள்ளது, நேர்த்தியான நெசவு கொண்டது; நீடித்து நிற்பது; உறுதியானது; அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள். விலை ரூ. 12-8-0. ரவிக்கை துண்டு 1-க்கு 12 அணா.

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக்கம்பி, டில்லி தர்பார், முதலிய தினுசுகள்.

$18 \times 2\frac{3}{4}$ விலை 13 8 0.
ரவிக்கை 1 முழம் 0 14 0.

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்த உருப்படி 1-க்கு 3-8-0 அதிகம்.

ஏஜண்டுகள் தேவை.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம்; ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால்பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி, ஜி. டி. சென்னை.

# ரக்ஷையும் மந்த்ர சக்தியும்

துரதிஷ்டத்தையகற்றி சுகஜீவனத்தை நாடுவோர்க்கு அவசியமானவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| கௌரவம், தனம், கல்வி பெருமைக்கு | 7 | 8 |
| ஆரோக்கியம், சரீரபலம்பெற | 7 | 8 |
| வாக்சாதுர்ய சக்திக்கு | 7 | 8 |
| நீதிவிவகார ஜெயிப்புக்கு | 10 | 0 |
| விளையாட்டு, பந்தயம் சீட்டு | 7 | 8 |
| விவகாரங்களில் ஜயிக்க | 10 | 0 |
| மாதரிடம் ஆடவரன்பு பெருக | 7 | 8 |
| ஆடவரிடம் மாதரன்புபெருக | 10 | 0 |
| ஆடவராயினும் ஸ்திரீயாயினும் முறையே வசீகரித்துக்கொள்ள | 7 | 8 |
| நல்ல மாசூல் அறுவடையாக | 7 | 8 |
| ரப்பி ஸாலமனின் ரக்ஷை | 15 | 0 |
| ஜயவீரஹீப்ருவினு லணியப்பெற்ற ரக்ஷை இரண்டாவது ரகம் | 21 | 0 |
| முதலாவது ரகம் | 30 | 0 |

குறிப்பு:-மணியார்டராவது கவர்ன்மென்ட் கர்ரென்ஸி நோட்டாவது அனுப்பினால், வீட்டிற்கே நேராக ரக்ஷை வந்து சேரும். ரக்ஷைவேண்டுவோர் முழுக்கிரயத்தையும் அட்வான்ஸாக அனுப்பிவிடவேண்டும். வி. பி. யில் அனுப்ப முடியாது.

D.A. RAMA DUTH,
**Astrologer**
*No. 30 and 55, (J) Chekku St.*
COLOMBO, Ceylon.

---

## மதனசிங்கர்
அல்லது
## உரிமை இழந்த சீமான்.

(திருத்தமான இரண்டாம் பதிப்பு.)

இந்த துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவலை படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து, இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு, வாசித்து முடித்த பின்னரே அவைகளைக் கவனிக்கச்செய்யும் என்பது நிச்சயம். விலை ரூ. 1 4 0.

## சுந்தரவதனி
அல்லது
## தர்மமே ஜெயமளிக்கும்,

இது ஓர் அதிபற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நவீனம். படித்தவுடன் திடுக்கிடச்செய்து, மனதைக் கவரும் ஆச்சரிய சம்பவங்களாலும், ரகஸ்யக் கடிதங்களாலும் நிறையப்பெற்றது. விலை அணா 12.

## வசந்த சமுத்திரம் அல்லது இரண்டு ஜெகன் மோகினிகள்.

இந்த இனிய துப்பறியும் நாவலில் துப்பறியும் சிங்கமாகிய ஸிம்ஹள நாதர் தாம் முன்னமே காதலித்த வசந்தமாலை என்பவளை வேறொரு திருடன் காதலிப்பதும் ஜயசிங் என்னும் பரதேசி வருதலும், திலகசமுத்திரம் தோன்றி சில விஷயங்களை உரைத்தலும், ஸிம்ஹள நாதரை கொலை செய்ய முயற்சிப்பதும் இந்நாவலின் கண் ரஸங்குறைவு படாமல் ஆரம்ப முதல் முடிவுவரையில் படிப்பதற்குத் தூண்டும் இயல்புடையதாக எழுதியிருக்கிறது. விலை 0 12 0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.

Sri Panduranga Press, Triplicane.

பையன்:—இல்லை சார்! எங்க வீட்டிலேயே எங்கம்மாள் பிள்ளை யார்போல வயிற்றைப் பெரியதாக வைத்துக்கொண்டிருக்கிறாள். அதனால் அந்தப்பிள்ளையாரையே வேண்டிக் கொண்டேன். இருவருக்கும் வயிறு ஒன்றாகத்தானே இருக்கின்றது. ஆனதால் அவள் பிள்ளையாரல்லவா?

* * * *

கிழவன்:—ஏனடா என் பிராணனை வாங்குகின்றாய்?

பையன்:—தாத்தா! எனக்குப் பிறருடைய பிராணனை வாங்குவதற்குச் சக்தியிருந்தால் நான் அந்த பள்ளிக்கூடத்து வாத்தியார் என்னை சதா அடித்தும் தட்டியும் இம்சை செய்கிறாரே அவர் பிராணனை ஒரு நொடியில் வாங்கிவிட்டு நான் சுகமாக விருக்கமாட்டேனா.

* * * *

மனைவி:—காதா! தாங்கள் ஊருக்குப் போய்விட்டால் வருமளவும் நான் தனிமையில் எப்படி யிருப்பேன்?

புருஷன்:—அடி பைத்தியமே! நான் ஊரிலிருந்து வீட்டிலில்லாத காலத்தில் உனக்கு எத்தனையோ பேயர்வழிகள் துணையிருக்கின்றார்களே, நான் ஊரில்லை என்பதை யறிந்த பின்னர் அவர்கள் உன்னை விடுவார்களா? விடாமலிருக்கும் பொருட்டே நான் காஷயம் தரித்துக்கொள்ளச் செல்கிறேன்.

* * * *

பெண்:—அப்பா! தினம் சிற்றன்னை என்னைப் பாலைக்கறந்து வரும்படி உத்தர விடுகின்றார்கள். காய்ச்சிய பிறகு எனக்கு ஒரு தினமேனும் பால் கொடுப்பதே யில்லை யப்பா.

தகப்பன்:—அடி அசடே! பாலைக்கறந்து நீ அவளிடம் கொடுத்த பிறகல்லவோ உனக்கவள் கொடுப்பதில்லை. கறக்கும்போதே உனக்கு வேண்டிய மட்டும் குடித்துவிட்டு மிகுதியை அவளிடம் கொடுத்துவிடு. இந்த யோசனை உனக்குத் தெரியாதா?

* * * *

குப்புசாமி:—ஐயா! இன்று ஓரிடத்தில் பிராமணார்த்தம். சாப்பிடுவதற்கு மணி இரண்டாகும்; அதுவரையில் தாங்கும்படியாவும், வயிறு எடுத்துக் காட்டாமலிருக்கும்படியாகவும் உள்ள ஆகாரத்தைக் கொடும். பிராமணார்த்த தக்ஷிணையில் உமக்குப் பங்கு தருகிறேன்.

ஓட்டல்காரன்:—ஐயா! எங்களிடத்தில் வயிறு எடுக்காமல் ஒட்டலாக விருக்கும்படியான ஆகாரமில்லை; பக்கத்துக் கடையில் ஊற்றின விளக்கெண்ணெய் இருக்கிறது; அதனை வாங்கிச் சாப்பிடும். வயிறு நன்றாக ஒட்டி விடும். பிராமணார்த்தம் நிறைய புசிக்கலாம்.

வை. மு. கோ.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்




விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

**உடனெழுந்துங்கள்.**

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிர்தாஞ்சன் டிபோ,

7. தம்புச் செட்டி வீதி, சென்னை.


Edited and Published by V. M. Parthasarathy Iyengar,
PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRAS S. E.